www.padippakam.com

பெண்ணடிமை தீராமல் மண்ணடிமை தீராது

# பெண் உரிமை

ஜன-பிப் 2001



‘ஆகாயத்தில் பாதி பெண்களுடையதே’

படிப்பகம்

www.padippakam.com

| பெண் உரிமை | உள்ளே . . . | பக்கம் |
|---|---|---|
| | | |

1 – 1

ஜனவரி - பிப்ரவரி 2001

*தனி சுற்றுக்கு மட்டும்*

**விலை**

**ரூ. 4.00**

**ஆண்டு சந்தா**

**ரூ. 30.00**

*தொடர்புக்கு...*

**அஜிதா**

17/34, இராணி அண்ணா நகர்,
கே.கே. நகர்,
சென்னை – 600 078.


☞ பெண் உரிமைக்காக... 3

☞ தோள் சீலைக் கலகம்... 5

☞ புதிருக்கு விடை... 8

☞ காவல்துறை கயவர்களால் வன்புணர்ச்சிக்கு இரையான நாகமணியின் வாக்குமூலம்... 9

☞ முள்ளுக்குள் ரோஜா 13

☞ உலகமயமாக்கலும், வணிகமயமாக்கப்படும் பெண்களும்... 14

☞ எதிரொலிப்பு... 19

☞ அடுப்பங்கரை... 21

☞ நேபாள விடுதலை இயக்கத்தில் நேபாள பெண்களின் பங்கு... 22

☞ செய்தித் துளிகள்... 29

☞ போராடும் பெண்கள் மீதான வன்முறைகள்... 33

☞ தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான கொடுமைகள்... 36




படிப்பகம்

www.padippakam.com

# பெண் உரிமைக்காக...

## அன்பார்ந்த நண்பர்களே !

ஒருநாள் அண்ணாசாலை நடைப்பாதையில் நடந்துக் கொண்டிந்தேன். அப்பொழுது, நூற்றுக்கணக்கான தொலைத்தொடர்பு தொழிலாளர்கள் தொலை தொடர்பு தனியார்மயமாக்கலை எதிர்த்து ஊர்வலமாக சென்றுக் கொண்டிருந்தனர். இரண்டு நாட்களுக்குப் பின், அதே பாதையை கடந்தபோது, சிம்சனிலிருந்து எல்.ஐ.சி வரை நேர் கோட்டில் கழுத்தில் அட்டைகளுடன் நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும் நின்று கொண்டிருந்தனர். அவ்வழியாக செல்பவர்களுக்கு துண்டறிக்கையும் கொடுத்தனர். யார் இவர்கள், ஏன் இப்படி விநோதமாக செய்கிறார்கள் என்று தெரிந்துக் கொள்ள ஆர்வமாயிருந்தேன். கடைசியாக, பேருந்தில் அமர்ந்த பின் ஒரு துண்டறிக்கை கிடைத்தது. அந்த துண்டறிக்கை வங்கி தனியார்மயமாக்கலை எதிர்த்து பல தகவல்களுடன் இருந்தது.

அடுத்த சில நாட்களில், கல்லூரி மாணவர் ஒருவரை சந்தித்தேன். அவருடன், நான் பார்த்த விசங்களை பற்றி பேசிக் கொண்டிருக்கையில், அவர் கல்லூரியில் பயிலும் இளம்பருவத்தில் உள்ள மாணவ, இளைஞர் சமுதாயத்தின் அவல நிலையை விவரித்தார். பாலியல் வக்கிரங்களை பகிர்ந்து கொள்ளும் 'ச்சேட்டிங்' செய்ய இண்டர்நெட் மையங்களில் இளைஞர்களும், மாணவர்களும் குவிவதையும், கல்லூரியில் அழகிப் போட்டி அறிவித்தால், மாணவர்கள் அலைமோதுவதையும் விவரித்தார். அவரிடம் பேசிக் கொண்டே செய்தித் தாளை புரட்டினேன். உலக அழகி 2000 இந்திய பெண் பிரியங்கா சோப்ரா என்ற செய்தி வந்திருந்தது. இந்த செய்தி வந்த சில நாட்களிலேயே மிஸ் யுனிவர்ஸ் இந்திய பெண்தான் என்று அறிவிக்கப்பட்டது.

ஒரு சில நாட்களில் எக்ஸ்போர்டு கம்பெனியில் வேலை செய்யும் பெண்ணை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. "ஏன் வேலைக்கு போறே, படிக்கலையா?" என்று கேட்டேன். "இல்லக்கா ! வீட்டில சாப்பாட்டுக்கு கஸ்டமா இருக்கு... அம்மா என்ன ஸ்கூலுக்கு போ வேணாம்ன்னு சொல்லி, எக்ஸ்போர்டு கம்பெனிக்கு அனுப்பிட்டாங்க... கம்பெனில காலையிலிருந்து சாயந்திரம் வரைக்கும் வேலை செய்ஞ்சாக்கூட 500 ரூபா தான் தர்றாங்க.... சம்பளத்த வெளியில சொல்லவே வெக்கமா இருக்குக்கா... அங்க மாஸ்டருங்க வேற தொட்டு தொட்டு கேலியா பேசறாங்க... எனக்கு வேலைக்கு போகவே புடிக்கல... எனக்கு படிக்க ஆசையா இருக்குக்கா..." என்று மனவருத்தத்துடன் கூறியது என் நெஞ்சை உலுக்கியது.

அந்த மனவருத்தத்துடன் வீட்டில் நான் படித்துக் கொண்டிருந்த போது, பிஸ்கேட் வாங்க சொல்லி ஒரு பெண்மணி வந்தார். நான், பிஸ்கேட் வேண்டாம்' என்றதும், கொஞ்சம் தண்ணியாவது கொடுமா என்றார். ஏங்க சாப்பிடலையா என்றேன்.



படிப்பகம்

www.padippakam.com

சாப்பாடா... வயிறாற சாப்பிட்டு எத்தன நாளாச்சு தெரியுமா? இருக்கிற விலைவாசியில என் புள்ளங்க சாப்பிட்டா போதும்... கிடைக்கிற வருமானத்தை வைச்சு, அதுங்க பசியில என்னை மாதிரி கஸ்டப்படாம இருந்தா போதும்... எங்க கஸ்டமெல்லாம் யாருக்கு தெரிய போவுது... ஏதோ கிருஷ்னாயில ஒரு ரூபாய் குறைச்சுட்டானுங்க... எல்லா ஓட்டுக்கு தாம்மா... நமக்கு யாரும் எதையும் செய்யமாட்டாங்க... என்று கூறிவிட்டு சென்றார்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்சனையை பற்றி சொல்கிறார்களே? பிரச்சனை இல்லாதவர் யாரும் இல்லையா? பிரச்சனைகளுக்கு விடிவு தான் என்ன? என்று ஒருநாள் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தேன்... பிரச்சனைக்கான தீர்வுக்காக தேடி அலைந்தேன்... நண்பர்களுடன் விவாதித்தேன்... புத்தகங்களை புரட்டினேன்...

இத்தனை ஆராய்ச்சிகளுக்கு பின் வெகு நாட்களுக்கு பின் ஒருசில விசயங்கள் புரிந்து கொள்ள முடிந்தது. பிரச்சனைகளை 'சமூக-பொருளாதார-அரசியல் பின்னணியில் அலசி ஆராயும்போது மட்டுமே தெளிவான தீர்வை நோக்கி செல்ல முடியும் என்று புரிந்துக் கொண்டேன். இத்துணை பிரச்சனைகளுக்கான காரணம் தான் என்ன?

50 ஆண்டு கால 'சுதந்திர' ஆட்சியில் ஏகாதிபத்திய சார்பின் விளைவாக கடன் பிடியில் சிக்கி கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக ஐ.எம்.எப். உலக வங்கியின் நிபந்தனைகளை ஏற்று, உலகமயமாக்கல், தாராள மயமாக்கல் கொள்கைகளை இந்திய ஆளும் வர்க்கங்கள் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றன. இந்திய பொருளியலின் அனைத்து துறைகளும் ஏகாதிபத்தியங்களுக்கு திறந்து விடப்பட்டுள்ளன. வங்கி, தொலைதொடர்பு, தபால் போன்ற அரசு துறைகள் தனியார் மயமாக்கப்படுகின்றன. பணவீக்கம், நாணய மதிப்பு வீழ்ச்சி, சிறுதொழில்கள் நசிவு, வரலாறு காணா விலைபேற்றம், வேலையின்மை, ரேசன் பொருட்கள் விலையேற்றம், மின் கட்டணம், பஸ் கட்டணம், தபால் கட்டணம், கல்வி கட்டணங்கள் ஏற்றம் என இந்திய உழைக்கும் மக்களின் வாழ்க்கை நரகமாகி வருகிறது.

இந்திய மக்கள் மீதான இத்துணை சுரண்டலைக் கட்டிக்காக்கவும், தனது சந்தைத் தேவைக்காக, தனது சீரழிவு-நுகர்வு பண்பாட்டை ஏகாதிபத்தியம் திட்டமிட்டு இந்தியாவில் திணித்து வருகின்றது.

*இந்த கொடுமைகளை எதிர்த்து கிளர்ந்தெழ வேண்டியது உழைக்கும் மக்களின்- பெண்களின் கடமையாகும். அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, ஏற்றுமதி நிறுவனங்களில் பெண்களின் உழைப்பு சுரண்டல், பாலியல் சுரண்டல், மேலை நாட்டு ஆபாச பண்பாட்டை எதிர்த்து போராட்டப் பாதையில் அணிதிரள்வோம் என்று மார்ச்-8 சர்வதேச உழைக்கும் பெண்கள் தினத்தில் உறுதியேற்போம்!*

*- ஆசிரியர்*



படிப்பகம்

www.padippakam.com

# தோள் சீலைக் கலகம்

பழங்காலத்தில் இந்தியாவில் சேலை அணியும் பெண்கள் மார்புக்குக் கச்சை எனும் ஆடையை அணிந்தனர். மார்பை துணி கொண்டு மறைக்கும் பழக்கம் இல்லாதிருந்தது. இன்று நாகரீகமும் விஞ்ஞானமும் வளர்ச்சியடைந்துள்ளது. இக்காலத்திலும் இன்று மலைவாழ்மக்களிடமும், கிராம மக்களிடமும் மார்புக்கு கச்சை அணியாமல் சீலையின் பகுதியால் மறைக்கும் வழக்கம் காணப்படுகிறது. கேரள நாட்டின் உடையாக இடுப்பில் வேட்டியும் மார்புக்கு இரவிக்கையும் அணிந்து சேலையையும் மாராப்பாக அணியும் வழக்கம் இன்று அனைவரும் சேலை அணியும் முறையாக இருக்கிறது. ஆனால், இன்றும் மலைவாழிடமான கொடைக்கானல், நீலகிரி வாழ் மகளிர் தங்கள் பிள்ளைக்குத் திருமணம் செய்தவுடன் தான் அணியும் இரவிக்கையை அணியமாட்டார்கள். மருமகள்(ன்) சம்பாதித்தால் இரவிக்கை அணியக்கூடாது என்ற வழக்கம் அவர்கள் இனப்பெண்களிடம் உள்ளது.

## தோள்சீலை அணியாமையின் பின்னணி :

தனி சொத்துரிமையின் விளைவாக தன் நிலம், தன்வீடு, தன் மனைவி என்ற குடும்ப அமைப்பு உருவானது. வீட்டை நிர்வகிக்கும் பொறுப்பை பெண் ஏற்றுக்கொண்டாள். நிலவுடமை காலகட்டத்தில் நான்கு வருணங்கள் உண்டாக்கப்பட்டன. பிராமணர், வைசியர், சத்திரியர், சூத்திரர் என்ற வருணங்களில் சத்திரிய குலமும், சூத்திர குலமும் தாழ்மையான குலமாகக் கருதப்பட்டது. முதலில் தொழில் அடிப்படையில் தோன்றிய வருணங்கள் பின் பரம்பரைத் தொழிலானபோது வருணங்களைச் சார்ந்தவர்களுக்கிடையே நான் பெரியவன், நீ சிறியவன் என்ற பேதமும் ஏற்பட்டது.

நிலவுடமைச் சமூகத்தில், உயர் வர்க்கத்தினருக்கு முன்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவன் செருப்பணிந்து செல்வதும், தோளில் துண்டு அணிவதும் குற்றமாகக் கருதப்பட்டது. இதை மீறுபவர்களுக்கு உயர் வர்க்கத்தினர் தண்டனை அளித்தனர். தண்டனைக்கு பயந்த தாழ்த்தப்பட்ட மக்கள் காலில் செருப்பணி தலையும், துண்டு, சட்டை முதலானவற்றை அணிதலையும் ஒதுக்கினர். மக்களின் பொருளாதார நிலைக்கும் ஏற்புடையதாயில்லாமல் செலவீனமாகக் கருதினர். சிலர் இவற்றைப் பயன்படுத்தினாலும் உயர்வர்க்கத்தார், நிலச்சுவான்தாரர்கள், முதலாளிகள் ஆகியோர் எதிரில் வந்தால் செருப்பை கழற்றி விட்டனர். மேல்துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டனர். இன்றும் கிராமங்களில் இவ்வழக்கத்தைக் காணமுடிகிறது.

அரசியல் சின்னமாக துண்டணியாமை பாதுகாக்கப்பட்டது. அதற்கொப்பாக பெண்கள் இரவிக்கை அணிவதும் குற்றமாகக் கருதப்பட்டது. அரச குலப் பெண்களும், மேல்சாதிப் பெண்களும் மட்டுமே மார்புக்கச்சை அணியும் உரிமைப்



படிப்பகம்

www.padippakam.com

பெற்றிருந்தனர். இன்று அந்த நிலை இல்லாததால் கட்டுக்கதை என்று இவற்றை முடிவு செய்ய முடியாது. வரலாறு, நமக்காக பல சம்பவங்களை, நிகழ்வுகளை வைத்துச் சென்றுள்ளது. அவை நிலவுடமைச் சமுதாயத்தின் ஆணாதிக்க நோக்கை வலியுறுத்துவன. அவற்றுள் கடந்த ஆயிரமாவது ஆண்டில் 19-ம் நூற்றாண்டில் குமரி மாவட்டத்தில் பெரும் கலகம் நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## நிலவுடமைப் பண்பாட்டை எதிர்த்த போராட்டம்:

பிற்போக்கு நிலவுடமை ஆதிக்க சக்திகள் பெண்கள் இரவிக்கையை அணியும் மரபை எதிர்த்தனர். அவர்களின் எதிர்ப்பை எதிர்த்தவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டனர். இத்தகைய வரலாற்று நிகழ்வு எது என்று தமிழகத்தை சார்ந்த அனைவரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

தோள்சீலைக் கலகம் என்று அழைக்கப்பட்ட இப்போராட்டம் மூன்று கட்டங்களாக 1822, 1828-1839, 1855-1859 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றுள்ளது. தமிழகத்தின் தென் பகுதியாகிய கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் இக்கலகம் நடந்தது. கலவர காலத்திற்கு முன் பெண்கள் மார்பகங்களை மறைக்கும் பழக்கம் இல்லை. நாயர்குலப் பெண்களும் அரச குலப்பெண்களும் மார்புக்கச்சை எனும் ஆடையை அணிந்தனர். மற்ற பெண்கள் இடுப்புடை மட்டுமே அணிந்தனர். மார்புக்கு ஆடை அணியாததை பல வகுப்பினரும் கவுரவம் என்றே கருதினர்.

ஆங்கில ஆட்சியின் விளைவாக இந்தியா முழுவதும் மேலைநாட்டு நாகரீகம் பரவ ஆரம்பித்தது. குறிப்பாக உடைவிஷயத்தில் மிகுந்த மாற்றம் ஏற்பட்டது. ஆண்கள் நீண்ட தலைமுடியை வெட்டிவிட்டு சிறிய முடியுடன் தலையலங்காரம் செய்து கொண்டனர். காதணி, காலில் அணியும் அணிகலன்களை தவிர்த்தனர். காலுக்குக் குழாயும் (பேண்டும்) உடலுக்குச் சட்டையும் அணிந்துக் கொண்டனர்.

ஆண்களைப் போலவே பெண்களும் தங்கள் உடல் முழுவதையும் மறைத்துக்கொள்ள எண்ணினர். தாழ்த்தப்பட்ட மக்கள் பலர் கிறித்தவராக மதம்மாறினர். திருச்சபையினரின் ஆதரவோடு இரவிக்கை அணிய ஆரம்பித்தனர். இவ்வாறு இரவிக்கை அணிவதை விரும்பாத பிற்போக்கு நிலவுடமை ஆதிக்க கும்பலும் இந்து வெறியர்களும் இணைந்து இரவிக்கையை பயன்படுத்திய கிறித்துவப் பெண்களைத் தாக்கினர். முதல்முதலில் கொத்தனா விளை எனும் இடத்தில் கலவரம் தொடங்கியது. மேலாடை அணிந்த பெண்களின் ஆடைகள் கிழித்தெறியப்பட்டன. கிறித்துவ மதத்தைத் தாக்கியும் (ப.12 குமரிமாவட்டப் பெண்ணுரிமைப் போராட்டம்) பெண்களின் மேலாடையை மறுத்து, நிலவுடமைப் பண்பாட்டை வலியுறுத்தி மறைந்துவிடாமல் பேணி காத்தனர்.

## உயர்தட்டுப் பெண்களின் மீதும் ஒடுக்குமுறை:

மேல்தட்டுப் பெண்களும், நாயர் இனப் பெண்களும் கச்சை அணிந்திருந்தனர். அவர்கள் அரசாங்கத்தின் உயர்பதவியினரை, அரச குடும்பத்தினரை, மத



படிப்பகம்

www.padippakam.com

குருமார்களை மற்றும் கோயில் தெய்வங்களை வணங்குவதற்கு அவர்களுக்கெல்லாம் மரியாதை அளிக்கவேண்டும் என்பதற்காக தங்கள் மார்புகளைத் திறந்து காட்ட வேண்டும் (ப. 105–109 குமரிமாவட்ட பெண்ணுரிமைப் போராட்டம்) என்பது எழுதப்படாத சட்டமாக இருந்தது.

உயர்குலப் பெண்டிர் மேலாடை அணிந்திருந்தாலும் என்ன பயன் கிடைத்தது. அவர்கள் தங்களது ஆடை அணிய வேண்டிய உரிமையைக் கூட வணக்கம் செலுத்த அவிழ்த்துக் காட்டும் இழிந்த நிலையில்தான் இருந்தனர். இது இவர்களே விரும்பி வரவேற்றதா? இல்லை! பிற்போக்கு நிலவுடமை ஆணாதிக்க சமூகத்தால் திணிக்கப்பட்ட இவ்வழக்கத்தை மேல்தட்டு வர்க்கப் பெண்கள் பல மன இன்னல்களுடன் ஏற்றுக் கொள்ள நிர்பந்திக்கப்பட்டனர்.

அரசர்கள், மதத் தலைவர்கள் மற்றும் ஏனைய மேல்தட்டு வர்க்க ஆண்களின் காம இச்சை இதுபோன்ற வழக்கங்களை நடைமுறைப்படுத்துவதால் பூர்த்தி செய்யப்பட்டது. இதற்கு பிற்போக்கு நிலவுடமை ஆணாதிக்க பண்பாடு 'கவுரவம்' என்ற பெயரில் அங்கீகாரம் தந்தது.

இந்த பிற்போக்கு நிலவுடமை ஆணாதிக்க பண்பாட்டை எதிர்த்து பெண்கள் கிளர்ந்தெழுந்தனர். தோள்சீலைக் கலகம் என்றழைக்கப்பட்ட பெண்களின் இரண்டு கட்ட போராட்டங்களின் விளைவாக பெண்கள் கச்சை எனப்படும் குப்பாயம் அணியலாம். ஆனால், தோள்பட்டையை மறைக்கும் வகையில் சேலையை அணியக்கூடாது என்று திருவிதாங்கூர் சமஸ்தானம் அறிக்கை வெளியிட்டது.

அதன் பின்னும், 1859 வரை, மக்கள் இடையறாது போராடியதன் விளைவாக 1865–ல் அனைவரும் தோள்சீலையை அணிய அனுமதி அளிக்கப்பட்டது. அந்த அறிக்கையை மலையாள மொழியில் ஸ்ரீ ஆயில்லியம், திருநாள் மகாராஜா வெளியிட்டுள்ளார்.

தோள்சீலை அணியவே பெண்கள் 37 ஆண்டுகள் போராடினர். இன்று பெண்கள் மீது இந்திய பண்பாடு, மதம், மேலை நாட்டு ஆபாச பண்பாடு, உலகமயமாதல், முதலான எண்ணற்றவை வாயிலாக ஒடுக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இதனை எதிர்க்க எத்தனை எத்தனை போராட்டங்கள் நடைபெற வேண்டியுள்ளது. இப்போராட்டத்தை தொடுக்க ஒவ்வொரு பெண்ணும் தயாராக வேண்டும்.

— *பொன்னி*

## ஒப்புமை

*கவிஞர்களே !*
*பெண்களை பூவிற்கு ஒப்புமைப்படுத்துவதை*
*நிறுத்துங்கள்.*
*இனிமேலாவது அவள் வாடாமல்*
*இருக்கட்டும்.*

— *என். சிவசக்தி*



படிப்பகம்

www.padippakam.com

## புதிருக்கு விடை

நித்தமும் பல கலாச்சாரத்தில்
கருகிக் கொண்டிருக்கும்
"கருத்தற்ற"
பெண்களாய் இல்லாமல்
அன்று தென்றலாய்
வீசிய நாங்கள்
இன்று புயலாய்
எழுந்துவிட்டோம்.
அனுதினமும் அர்த்தமுள்ள
பெண்ணினமாய் வாழவே
அணைகளைத் தாண்டி
அலையாய் எழுந்துவிட்டோம்.
சித்ரவதைகளை சீருடையாய்
அணிந்த காலம் மாறி
சிறைக் கம்பிகளை
உடைத்து எழுந்துவிட்டோம்.
அடுப்பே
அரவணைப்பு என்ற காலம்
மாறி புது உலகம்
படைத்திட புயலாய்
எழுந்துவிட்டோம்.
வீட்டுக்குள் அடைபட்டு
புழுங்கி புழுவாக
துடித்த காலம்
மாறிவிட்டது
எங்களுக்கும்
புரிந்து விட்டது
கலாச்சாரம் என்ற
புதிருக்கு விடை.

—யதார்த்தவதி.

## வங்கிகள் தனியார் மயம்

வங்கிகளில் அரசு 33 சதவீதம் பங்குகளை தான் இனி போடப் போகிறது! எஞ்சிய பங்குகள் தனியாருக்கு விடப்போகிறது என்ற திடுக்கிடும் செய்தி செய்தித்தாள்களில் வெளிவந்துள்ளது.

1969 ஆம் ஆண்டு கோயோங்கோ, டாடா போன்ற இந்திய தரகு முதலாளிகளின் கையிலிருந்த வங்கிகள், மேலும் முதலாளிகளின் இலாப வேட்டையை பெருக்க இந்திய அரசால் தேசியமயமாக்கப்பட்டன. ஏழை, எளிய, நடுத்தர வர்க்க மக்கள் சிறிது சிறிதாக வங்கிகளில் சேமித்த பணத்தை முதலாளிகள் பெருந் தொகையாக கடனாகப் பெற்று அவர்களின் தொழில், வியாபாரம் பெருக இதுநாள் வரை இந்த தேசிபமயமாக்கல் வழிவகுத்துள்ளது. இப்படி பெரும் பணக்காரர்கள் வாங்கிய பணம் திருப்பித் தராத கடன் மட்டும் 1,20,000 கோடி ஆகும். இந்த கடன் திருப்பி கொடுத்ததாக இந்திய வரலாற்றில் இல்லை.

அரசின் இந்த அறிவிப்பால் வங்கிகள் தனியார் மயமாக்கப்படுவதால் பன்னாட்டு நிறுவனங்களிடம் சிக்க போகின்றது. தற்போது கிடைக்கும் கொஞ்ச கடனை வைத்தாவது நாட்களை ஓட்டும் விவசாயிகள், தொழிலாளர்கள் நிலை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# காவல்துறை கயவர்களால் வன்புணர்ச்சிக்கு இரையான நாகமணியின் வாக்குமூலம்

*(மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் வழக்கறிஞர். தமயந்தி மற்றும் அவரது நண்பர்களிடம், தர்மபுரி அஞ்செட்டியில் காவல்துறையினரால் வன்புணர்ச்சிக்கு இரையான நாகமணி கொடுத்த வாக்குமூலம் பிரசுரிக்கப்படுகின்றது.*

*– ஆசிரியர்)*



பெயர் : நாகமணி

வயது : 35

கணவர் பெயர் : வெங்கடேஷ்

முகவரி : மஜீத் தெரு,
அஞ்செட்டி,
தேன்கனிக் கோட்டை,
தருமபுரி மாவட்டம்.

## நாகமணியின் வாக்குமூலம்

நான் பாகலூருக்கு குடிபோய் ஒரு வருடமாகிறது. அங்கே அரசாங்க பட்டுபூச்சி கம்பெனியில் வேலை செய்து வந்தேன். அப்போது கம்பெனி மூடிவிட்டதால், அஞ்செட்டியில் என் மகன் ராஜா(வயது 15)வுடன் தனியாக வீடு பார்த்து வந்துவிடலாம் என்று எண்ணி சம்பவம் நடந்த (23.6.2000) அன்று இரவு 9.15 மணியளவில் அஞ்செட்டி வந்தேன். அதுசமயம் என் மகன் லாரியில் கிளீனராக வெளியூருக்கு சென்றுவிட்டான். நான் வந்த பஸ்ஸானது, அஞ்செட்டியில் போலீஸ்நிலையம் முன் உள்ள செட்டியார் கடை நிறுத்தத்தில் என்னை இறக்கிவிட்டது. அதுசமயம் அங்கேயிருந்த கடைகள் மூடிக் கொண்டிருந்தார்கள். அப்போது சேகர், ரவி என்ற காவலர்கள் (போதையுடன்) என்னை பார்த்து "உன்மீது புகார் கொடுத்துள்ளார்கள். அதனால் ஸ்டேசன் வரை வந்து ஒரு கையெழுத்து போட்டுவிட்டு போ" என்றனர். "உன்மீது டி.எஸ்.பி. வரை புகார் சென்றுள்ளது" என்றனர். நான் என்ன கேஸ் என்று கேட்டதற்கு சரியாக பதில் சொல்லவில்லை. நான் காலையில் வந்து கையெழுத்து போடுகிறேன் என்றேன். இப்பொழுதே வந்து போடவில்லை என்றால் கிழித்துவிடுவேன் என்று மிக அசிங்கமாக பேசினர். நான் வீட்டுக்கு போய்



படிப்பகம்

www.padippakam.com

சொல்லிட்டு வருகிறேன் என்றேன். 10 மணிக்குள் வரவில்லை எனில் விபரீதமாகிவிடும் என்று மிரட்டி அனுப்பினார். நான் என் அத்தை வீட்டிற்கு சென்றேன். என் அத்தை பாப்பம்மாள். இவர் ஸ்டேசனில், கூட்டும் வேலை செய்கிறார். அவர் உடல் நிலை சரியில்லாமல் படுத்திருந்தார். மாமா இல்லை. அதனால் உடனே ஸ்டேசன் போய் கையெழுத்து போட்டுவிட்டு வந்துவிடலாம் என்று எண்ணி போனேன். அங்கே சேகர், ரவி இருந்தனர். அவர்கள் இன்ஸ்பெக்டர் வீட்டில் இருக்கிறார். அங்கே போய் விசாரித்து கையெழுத்து போட்டுவரலாம் என்று கூறி சிறிது தூரத்தில் இருந்த ராமசாமி என்ற ஊர்த்தலைவருக்கு சொந்தமான வீட்டில் வாடகைக்கு தங்கியிருக்கும் இவர்களது வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

அங்கே இன்ஸ்பெக்டர் இல்லை. இதற்கிடையில் சேகர், என்னையும் ரவியையும் உள்ளே தள்ளி கதவை தாழிட்டான். நான் ரவியை கெஞ்சியும் என்னை விடவில்லை. என் உடைகளை களைய சொன்னார். ஆனால் நான் மறுத்தேன். பேட்டரி லைட்டால் என் தலையிலும், முதுகிலும் அடித்ததோடு அசிங்கமாக பேசினான். அதன்பின் ரவியே என் உடைகளை களைத்து நிர்வாணமாக்கி சுமார் அரைமணி நேரம் என்னை சித்ரவதைக்குள்ளாக்கினான். உன்னிடம் எத்தனை போலீஸ்காரன் வந்தான், வெளியாள் எத்தனை பேர் வந்தான் என்று கேட்டு அசிங்கமாக பேசி சொல்லுடி என்று கெட்ட வார்த்தைகளால் என்னை பேசினான். அதன்பின் என்னை கீழே தள்ளி ஒருமணி நேரம் கற்பழித்தான். என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை. கதறினேன். ஆனால் விடவில்லை.

அதன்பின் ரவி சென்றதும் சேகர் வந்தான். அவனும் என்னை ஒரு மணிநேரம் சித்ரவதை செய்து கற்பழித்தான். என் உடலில் பல இடங்களில் கடித்தார்கள். மிக கொடுமையான முறையில் என்னால் வெளியில் சொல்லமுடியாத அளவிற்கு சித்ரவதை செய்தார்கள். அதன்பின் உன்மீது கேஸ் இல்லாமல் செய்துவிடுகிறேன், வெளியே யாரிடமும் இதுபற்றி சொன்னால் உனக்குதான் அசிங்கம் என்று சொன்னான்.

நானும் மயக்கமாகும் சூழ்நிலையில் என் உடைகளை அணிந்து கொண்டு தட்டுதடுமாறி என் அத்தை வீட்டிற்கு இரவு சுமார் 12.30 மணிக்கு சென்று யாரிடமும் சொல்லாமல் படுத்துக் கொண்டேன். ஸ்டேசனிலிருந்து என் அத்தை வீட்டிற்கு 10 நிமிடத்தில் நடந்து விடலாம். அடுத்த 2 நாட்களும் உடல் முழுதும் வலியுடனும், உடல் உபாதைகளுடனும் நடக்கமுடியாமல் வீட்டிலேயே படுத்திருந்தேன். என் அத்தை விசாரித்தபோது என்னால் எதுவும் பேசமுடியவில்லை.

அதன்பின் சனிக்கிழமை இரவு (24.6.2000) அத்தையிடம் சொன்னேன். அடுத்தநாள் ஞாயிறு 26.6.2000 அன்று ஸ்டேசன் சென்று அந்த காவலர்களை திட்டியதாக சொன்னார். அதன்பின் திங்கள் 27.6.2000 அன்று மாதேவன், பாண்டு என்று சி.பி.ஐ. கட்சி தோழர்களிடம் நடந்த விவரங்களை சொன்னேன். அவர்கள் டி.எஸ்.பி.க்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு நடந்த விவரங்களை சொன்னார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

பிறகு காவல்நிலையம் சென்று இன்ஸ்பெக்டரிடம் நடந்ததை நானும் பாண்டு, மாதேவன் ஆகியோர் சொன்னோம். அவரும் ரவியை அழைத்து விசாரித்ததில் ரவியும் நடந்ததை ஒப்புக் கொண்டார். அதன்பின் சரி இனிமேல் பிரச்சனை செய்யாதீர்கள். பேசி முடிவு செய்து கொள்ளலாம். இதோடு விட்டுவிடுங்கள் என்று இன்ஸ்பெக்டர் கூறினார். நாங்கள் ஒத்துக் கொள்ளவில்லை. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டோம். பிறகு காலையில் வருகிறோம் என்று கூறி வந்துவிட்டோம்.

அன்றே நான் அத்தை வீட்டில் தனியாக இருக்கும்போது சாராய வியாபாரி கிருஷ்ணன் மற்றும் காதர் (ஊர்காரர்கள்) ஆகியோர் மாதேவன் கூப்பிடுகிறார் என்று கூறி இரவு 8.00 மணியளவில் என்னை அழைத்தனர். நானும் தெரிந்தவர்தானே என்று நம்பி சென்றேன். அவர்கள் பஸ் நிலையம் வரை அழைத்து சென்றதும் நான் பயந்து கொண்டு வரமாட்டேன் என்று சொன்னேன். அதனால் மிரட்டி ஸ்டேசன் அழைத்து சென்று அங்கு தயாராக நின்று கொண்டிருந்த லாரியில் ஏற்றி ரூ. 1000/– கொடுத்து 2 நாள் இங்கே வராதே, உடல்நிலையை பார்த்துக் கொள் என்று கூறி பாகலூர் கூட்டி சென்றனர். தேன்கனி கோட்டையில் காதர் இறங்கிக் கொண்டார். கிருஷ்ணன் பாகலூர் பஸ் நிலையத்தில் என்னை இறக்கிவிட்டு சென்றுவிட்டார். (அஞ்செட்டியிலிருந்து பாகலூருக்கு பஸ்சார்ஜ் 15 ரூபாய்). அங்கு கோட்டை தெருவில் உள்ள என் வீட்டில் தங்கியிருந்தேன். தம்பி, தங்கை யாரும் ஊரில் இல்லை. ஆனால் 2 நாட்கள் யாரிடமும் சொல்லவில்லை.

அதன்பின் என் மகன் ராஜா வெளியூர் சென்று திரும்பி வந்தான். அவனுக்கும் விஷயம் தெரிந்த உடனே மாதேவன் கூப்பிட்டார் என்று என்னை அஞ்செட்டிக்கு அழைத்து சென்றான். அங்கே அத்தை வீட்டில் இருந்தபோது மாதேவன் வந்தார். அவர்கள் அழைத்ததும் ஏன் நம்பி சென்றாய் என்று கேட்டார். அதற்கு நான், நீங்கள் கூப்பிட்டதாக சொன்னதால்தான் சென்றேன் என்று சொன்னேன். பாகலூரில் இருந்த 2 நாட்களும் என் உடல்நிலை மோசமாக இருந்ததாலும் நடக்க முடியாமல் இருந்ததாலும் என்னால் அஞ்செட்டி வரமுடியவில்லை. வெள்ளியன்று (30.6.2000) டி.எஸ்.பி.க்கு மாதேவன் தகவல் தெரிவித்து அஞ்செட்டிக்கு வரும்படி கூறினார். இதனால் விசாரணை மேற்கொள்வதற்காக டி.எஸ்.பியும் வந்தார்.

இதற்கு முன்பு பாண்டுவை, குணசேகரன் என்ற காவலர் அடித்து படுகாயப்படுத்தியதாக தெரிந்து கொண்டேன். எனக்கு நடந்த நிகழ்ச்சி பற்றி இல்லாமல் பாண்டுவை அடித்த சம்பவம் பெரிதாகிதான் டி.எஸ்.பி. வந்திருந்தார். அதன்பின் விஷயம் அறிந்து என்னை அழைத்து விசாரித்தார்கள். பிறகு இதுபற்றி உடன் நடவடிக்கை எடுப்பதாக என்னை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். விசாரணையின் போது டி,எஸ்.பி, ஆர்.டி.ஓ. மற்றும் உயரதிகாரிகள், காவல்நிலைய ஆய்வாளர் இருந்தனர். மாலை சுமார் 5 மணியளவில் விசாரணை செய்தார்கள்.

அடுத்தநாள் சனிக்கிழமை 1.7.2000 அன்று மீண்டும் ஸ்டேசன் அழைத்துச் சென்று விசாரணை செய்து மாலை 6.00 மணிக்கு மேல் என் அத்தையுடன்



படிப்பகம்

www.padippakam.com

தேன்கனிக்கோட்டைக்கு அழைத்து சென்றனர். அங்கே லேடி டாக்டர் இல்லாததால் ஒசூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதில் அங்கே எனக்கு பரிசோதனை செய்யப்பட்டு, ஒருநாள் தங்கவேண்டும் என்று கூறினர். திங்கள் வரை அங்கே இருந்தேன். அதன்பின் செவ்வாய் 4.7.2000 அன்று டிஸ்சார்ஜ் செய்தனர். என் மருத்துவ பரிசோதனை சான்றுகளை எனக்கு பாதுகாவலாக இருந்த காவலர்கள் பெற்றுக் கொண்டனர். என்னிடம் எதுவும் கொடுக்கப்படவில்லை. மருத்துவமனை விட்டு வெளிவரும்போது சி.பி.ஐ. கட்சியனர் வந்து என்னை விசாரித்தார்கள். ஸ்டேசனிலிருந்து மருத்துவமனைக்கு கூட்டிவரும் முன்பு நான் கொடுத்த ஸ்டேட்மென்டின் பேரில் ஐந்தாறு இடங்களில் எனது விரல்ரேகையை வாங்கிக் கொண்டனர்.

ஆகையால் என்மீது ஏற்படுத்தப்பட்ட இந்த கொடூர சம்பவத்திற்கு காரணமான காவலர்கள் ரவி, மற்றும் சேகர் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொண்டு அதிகபட்சமான தண்டனையை வழங்கவேண்டும் அத்தோடு எனக்கு ஏற்பட்ட இக்கொடூர சம்பவம் மற்ற என் போன்ற அப்பாவி பெண்களுக்கு ஏற்பட்டுவிடகூடாது.

ஆகையால் மேற்கண்ட நபர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதோடு இச்சம்பவம் பற்றி முழுமையாக தெரிந்திருந்தும், அவர்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளாமல் எனக்கு பணம் கொடுத்து சரிக்கட்ட முயன்று நடந்த சம்பவத்தை மூடி மறைக்க முயன்ற காவல் ஆய்வாளர் வெங்கடாசலம் மீதும் கடுமையான நடவடிக்கை எடுத்து அபலை பெண்ணான எனக்கும், என் மகனுக்கும் உரிய நீதி கிடைக்க வழி செய்யுமாறு கண்ணீருடன் கேட்டுக் கொள்கிறேன்.

***நாகமணி***




*நன்றி : தினமணி*



படிப்பகம்

www.padippakam.com

# முள்ளுக்குள் ரோஜா

அன்னையின் மடியில் பிறந்தவளை
பிஞ்சு வயதினில் நஞ்சு வைத்து
கொல்லும் நிலை பெண்களுக்கு!
பெரியோரின் வாக்குக்கு கட்டுப்பட்டு
அரும்பி நின்றாள்!
ஆனால் உள்ளுக்குள் புகைகின்றாள்!
ஆணாதிக்கம் தாங்க முடியாமல்...
பெண்கள் நாட்டின் கண்கள்
என்றனர் மேடையில்!
வீட்டினில் அடிமை பெண்களாம்!
மண்ணுக்கும் நீருக்கும் பெண் பெயர்கள்!
மனித நெஞ்சினிலோ முட்களின் வேர்கள்!
ரோஜா முட்களினால் சிவக்கின்றன.
இந்த ரோஜாக்களோ கொடுமையால் சிவக்கின்றன!
கி.மு ஏட்டினில் முத்திரையை பதித்துவிட்டு
கி.பி அறிவினில் முன்னேறி விட்ட
நம் இளைய பாரதம்...
பெண் சுதந்திரம் காண வில்லையே!
பெண் அடிமை தீர வில்லையே!
ஒருவன் சொல்கிறான்
பகலில் பத்தினியாய் இரு! இரவில் வேசியாய் இரு!
ஒரு நிமிடம் நினைக்கையில்
கண்களில் கண்ணீர் வரவில்லை
மழை வெள்ளம் தான் வரும்போல் இருக்கிறது!
பெற்றோரிடம் அடிமை! கணவனிடம் அடிமை!
பிள்ளையிடம் அடிமை! புகுந்த வீட்டில் அடிமை!
சமுதாயத்திற்கும் அடிமை!
ஆக மொத்தத்தில் அவள் வாழும் வாழ்க்கை
முள்ளுக்குள் ரோஜா!

— சே. கனிமொழி



படிப்பகம்

www.padippakam.com

# உலகமயமாக்கலும் வணிகமயமாக்கப்படும் பெண்களும்

*உலகமயமாக்கலும் வளர்ந்துவரும் பெண்களின் மீதான வன்முறைகளும் என்ற தலைப்பில் நடந்த பட்டறையில், கர்நாடகத்தை சார்ந்த மகிளா ஜாகிருதி சமர்ப்பித்த கட்டுரையின் அடிப்படையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது*

*– ஆசிரியர்*

பெண்களை வணிகமயமாக்குவது என்றால் என்ன? இது எப்படி செய்யப்படுகிறது? ஏன் துரிதப்படுத்தப்படுகின்றது என்பதையும், முதலாளித்துவம் இந்தியாவில் வேரூன்ற ஆரம்ப காலக்கட்டத்திலிருந்து இன்று வரை என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும், அதன் விளைவுகளைப் பற்றியும் ஆழமாகக் காண்போம்!

பெண்களை வணிகமயமாக்குவது என்பது – பெண்களை பொருட்களாக பாவித்து இலாபத்திற்காக விற்பதே. பெண்கள் இப்படி வணிகமயமாக்கப்படுவதால், பெண்களுக்கு எதிராக வன்முறைகள் அதிகரிக்கின்றது. அதே சமயம் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை இது நியாயப்படுத்துகின்றது. இதனால் ஆணாதிக்க நிலவுடமை ஒடுக்குமுறைகளை அதிகரிக்க செய்கின்றது.

## பெண்கள் வணிகமயமாக்கப்பட்டதன் வரலாற்றுப் பின்னணி

இந்திய சமூகத்தில் நிலவுடமை காலக்கட்டத்தில், பெண்கள் பொழுதுபோக்கிற்கான தேவதாசிகளாகக் கருதப்பட்டனர். நிலப்பிரபுக்கள் தேவதாசிகளை பொழுதுபோக்கிற்காக ஆட சொல்லியும், பாட சொல்லியும், அவர்களின் உடலை அனுபவித்தபின் பரிசுகள் வழங்கினர். அக்காலக்கட்டத்தில் தேவதாசிகள் சந்தைக்குக் கொண்டுவரப்படவில்லை. முதலாளித்துவ வளர்ச்சிக்குப் பின் பெண்களை சந்தைப்பொருளாக்குவது – அதன்பின் பெண்களை சந்தையில் விற்பது, வாங்குவது என்பது வழக்கத்திற்கு வந்தது.

நிலப்பிரபுத்துவ சமூகத்தில் நிலப்பிரபுவின் சுய விருப்பத்துக்காகத்தான் பெண்கள் பயன்படுத்தப்பட்டனர். இத்தருணத்தில் கூலி ஏழை விவசாய பெண்களின் உழைப்பும் சுரண்டப்பட்டது. முதலாளித்துவ வளர்ச்சியினால் உழைப்பு சக்திகள் சமூகமயமாக்கப்பட்டு, உழைப்பு பணத்திற்காக சுரண்டப்பட்டு தனிசொத்துரிமைகள்



படிப்பகம்

www.padippakam.com

வளர்க்கப்பட்டன. இதனால் உழைக்கும் வர்க்க ஆண்கள் பெண்களின் உழைப்பு குறைந்த கூலிக்கு சுரண்டப்பட்டது, ஆனால், அதே சமயம் ஒடுக்கப்படும் வர்க்கம் தன்னுடைய வர்க்கத்தன்மையை பேணிக்காத்தது.

இக்காலக்கட்டத்தில் பெண்கள் தங்களை அழகு செய்து கொள்வதற்காக, அழகுணர்வு தொழில்மையங்கள் ஏற்படுத்துவதற்கான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பெண்கள் அழகு நிலையங்களுக்கு சென்று தங்களை அழகுப்படுத்திக் கொள்வதில் அதிக நேரம் செலவழிக்க ஆரம்பித்தனர்.



முதலாளித்துவத்தில் அனைத்துமே சந்தைப்பொருளாகிறது. நுகர்வு தண்ணீர் – பிஸ்லரி தண்ணீர் என்று தண்ணீரும் பணம் கொடுத்து வாங்குவது – மின்சாரத்தையும் நுகர்வு பொருளாக்குவது என்பது வழக்கத்திற்கு வந்தது. இத்தருணத்தில் பெண்களும் நுகர்வுப் பொருளாக்கப் பட்டனர். இதனால் முதலாளிகள் கொள்ளை இலாபமடைகின்றனர்.

முதலாளித்துவம், வீட்டு உற்பத்திக் கான இலவச உழைப்பையும் சுரண்டி அதிக இலாபமடைய விரும்புகின்றது. இதனால் பெண்களை சந்தைக்குக் கொண்டு வந்து நுகர்வுப் பொருளாக்குகின்றது.

## பெண்கள் எப்படி நுகர்வுப் பொருளாக்கப்படுகின்றனர்?

முதலாளித்துவம் பெண்களை நேரடியாக சந்தைக்கு கொண்டுவருகின்றது. இது முறைப்படுத்தப்பட்டு விபச்சாரமாக்கப்படுகின்றது. தேவதாசி முறையை நடைமுறைக்கு கொண்டுவருகின்றது. உதாரணத்திற்கு, பூரி சங்கராச்சாரியார் கடந்த மூன்று வருடங்களுக்கு முன் 'இந்து' நாளேட்டில் தேவதாசிகள் தேவை என்று விளம்பரம் கொடுத்திருந்தது, தேவதாசி வழக்கத்தை நடைமுறைப்படுத்த பூரி சங்கராச்சாரியார் வெளிப்படுத்திய ஆதங்கத்தை அம்பலப்படுத்தியது.

இன்று, பெண்கள் அந்தஸ்து அனைத்தும் இழந்து, பாலியல் தொழிலுக்கு ஆட்படுத்தப்படுவது என்பது சகஜமாகிவிட்டது.

## 'விபச்சாரம்'

பெண்கள் கடத்தப்பட்டு விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். மலைப் பகுதிகளில் இவ்வழக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. வேலை வாய்ப்பின்றி, குறைந்த படிப்பறிவுடன் இருக்கும் பெண்கள் கடத்தப்பட்டு இத்தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக, கேரளத்தில் பாலக்காடு மாவட்டத்தில் அட்டப்பாடியில் 18–25 வயதுள்ள 360 பெண்கள் பாலியல் கொடூரத்திற்கு



படிப்பகம்

www.padippakam.com

இரையாகியுள்ளனர். வேலையின்றி, நிலமின்றி, உள்ள இருளர் மலைவாழ் பெண்களை பாலியல் கொடூரத்திற்கு இரையாக்கி விட்டு, அந்தப் பகுதியை விட்டே காணாமல் போய்விடுவது சகஜமாக உள்ளது. இந்தக் கொடூரத்தைத் தாங்க இயலாமல் சில பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்.

இதுமட்டுமில்லாமல் பலவந்தமாக பாலியல் வன்முறைக்கு இரையாக்குவது போன்ற கொடூர சம்பவங்களும் பெண்களை இந்த பாலியல் தொழிலில் ஈடுபடுவதை அதிகரிக்க செய்கின்றது.

நகரங்களில் மட்டும் 8,00,000 பெண்கள் பாலியல் தொழிலுக்கு இரையாகியுள்ளனர். இக்கொடுமை ஒவ்வொரு வருடத்திற்கும் 50 சதவீதம் அதிகரிக்கின்றது.

இப்பெண்கள் குறைந்தக் கூலிக்காக அரேபிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனர். ஆட்சி அதிகாரத்தில் உள்ள அரசியல் ரௌடிகள் இக்கொடூரத்திற்கு துணை நின்று துரிதப்படுத்துகின்றனர். உதாரணமாக வீட்டு வேலை செய்ய சங்கங்களின் பெயரில் தேர்வு செய்யப்பட்டு குவைத் நாட்டிற்கு அனுப்பப்படுகின்றனர். அங்கு, விபச்சாரத் தொழிலில் பெண்கள் பலவந்தமாக ஈடுபடுத்தப்படுகின்றனர். இப்படிப்பட்ட பெண்கள் மீட்கப்பட்ட செய்திகளும் சமீபத்தில் வெளியானது.

நகரங்களில் விபச்சாரத் தொழில் அதிவேகமாக வளர்ந்துக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக சென்னை பாரிமுனையில் குறளகம் வாயிலில் பத்து நிமிடத்திற்கு மேல் நிற்கும் பெண்கள், பாலியல் தொழிலில் ஈடுபட அழைத்துச் செல்லப்படுகின்றனர். பைவ் ஸ்டார் ஹோட்டலில் பெண்களை அழைத்துச்சென்று சாப்பாடு கொடுத்து ரூ 100 கொடுப்பது வழக்கமாக உள்ளது. டெல்லி இரயில் நிலையத்தை ஒட்டிய துணிக்கடைகளில் பெண்களின் அங்கங்களை தொட்டு அனுபவிக்க பத்து நிமிடத்திற்கு ரூ100 கொடுப்பது சகஜமாக உள்ளது. கர்நாடக – ஹைதராபாத் பகுதிகளில் பெண்கள் மும்பை நகரின் 'சிவப்பு பகுதிக்கு' ஏற்றுமதி செய்யப்படுகின்றனர். இதற்கான தரகர்களும் வளர்ந்து வருகின்றனர். ஆந்திரா, மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் பெண்களை ஏலத்திற்கு விடுவது என்பதும் நடக்கின்றது. ஆந்திரத்தில் மட்டும் இதுவரை 100 பெண்கள் ஏலம் விடப்பட்டுள்ளனர். பின்தங்கிய பகுதிகளில் இச்சம்பவங்கள் அதிகமாக நடக்கின்றன. ஏழ்மை இது போன்ற சம்பவங்களை துரிதப்படுத்துகின்றது. இதனால் பெண்கள் வணிகமயமாக்கப்படுவதும் அதிகமாகின்றது.

இராஜஸ்தானில், நாட்டா இனத்தைச் சார்ந்த பெண்கள் திருமணம் செய்து கொள்ள பணம் கொடுக்கவேண்டும் என்ற வழக்கம் உள்ளது. கணவன் அவளை மீண்டும் வேறொருவனுக்கு பணத்திற்காக விற்பதும் வழக்கத்தில் உள்ளது. கணவனே மனைவியை ஏலம் விடுவதும் நடக்கின்றது. ஒருபுறம் பெண்ணை விற்பனை செய்வதும் மற்றொருபுறம் பெண்களின்மீது பதிவிரதம் போன்ற நிலவுடமை வழக்கங்களும் திணிக்கப்படுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

கேரளாவில் தற்காலிக திருமணங்கள் நடைமுறையில் உள்ளது. வெளிநாட்டவர்கள் முஸ்லீம் மாப்லா இனப் பெண்ணை திருமணம் செய்துக் கொண்டு சில நாட்கள் அவர்களை அனுபவித்துவிட்டு பின் நாட்டை விட்டே சென்றுவிடுவது வழக்கமாக உள்ளது.



உடுத்த ஆடையில்லை ஆனால் கம்யூட்டர்!

இது மட்டுமல்லாமல், வளர்ந்துவரும் தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் வளர்ச்சியும் பெண்களை வணிகமயமாக்குவதை துரிதப்படுத்துகின்றது.

இண்டர்நெட் தரகர் வேலையையும் செய்ய ஆரம்பித்துவிட்டது. உதாரணமாக யாஹீ (Yahoo) வில் உங்களின் புகைப்படம் அனுப்பினால், உங்களுக்குத் தேவையான ஆணோ, பெண்ணோ கிடைக்கும் என்று விளம்பரம் செய்வதன்மூலம் இந்த தரகர் வேலை பிரமாதமாக செய்யப்படுகிறது. மேலும் இண்டர்நெட்டிலே, வாலிபர்கள் பெண்களின் அங்கங்களை பார்த்து கேலி கூத்தடிக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளது. 'சேட்டிங்' என்று உலகிலுள்ள எந்த பெண்ணுடனாவது (அல்லது) ஆணுடனாவது பாலியல் வக்கிரங்களை பகிர்ந்து கொள்வது என்பதும் சகஜமாகி விட்டது. சூதாட்டத்தில் பணத்தை செலவழிப்பது போல, சேட்டங்கிற்காக இளைஞர்கள் பணம் செலவழிக்கின்றனர். இதனால், பெண்களும் பல கொடுமைகளுக்கு இரையாகின்றனர்.

சமீபத்தில் சேட்டிங் என்று சொல்லி ஒரு பெண் ஒருவனுடன் கம்யூட்டரில் பேசியபின் வீட்டிற்கு வரும்படி முகவரி கொடுத்துள்ளார். அந்த நபர் தன்னை ஒரு மருத்துவர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு அந்தப் பெண்ணின் உடல்நிலையை குணப்படுத்த மருந்து வாங்கி வருவதாக வெளிசென்று மயக்க மருந்து வாங்கி வந்துள்ளார். அந்த மருந்தைக் கொடுத்து அப்பெண்ணை பாலியல் வன்முறைக்கு இரையாக்கிய செய்தி செய்தித்தாளில் வெளியானது.

## இலாபத்தை பெருக்க பெண்கள் பொருளாக பயன்படுத்தப்படல்

வெளிநாட்டு கம்பெனி பொருட்கள் இந்திய சந்தையில் விற்பனையாவதற்காக அழகிப் போட்டி நடத்துவது, விளம்பரங்கள் செய்வது என்று போட்டி போட்டுக்கொண்டு செய்துவருகின்றன. மிஸ் யுனிவர்ஸ், மிஸ் வேர்ல்ட் – அனைத்திலுமே இந்திய பெண்களை தேர்ந்தெடுத்து இப்பெண்களை வைத்து இந்திய சந்தையை பிடித்து இந்திய நாட்டை தன் கட்டுக்குள் கொண்டுவரத்தான். இந்த அறிவிப்புக்களையும் செய்துள்ளன. அழகிப் போட்டியில் பெண்களின் மார்பு அளவு மூக்களவு அனைத்தையும் வர்ணித்து குறிப்பிட்ட எடையுடன் இருந்தால் அவள் போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்படுவாள். இல்லையெனில் அழகிப் போட்டி சந்தையிலிருந்து அவள் தூக்கியெறியப்படுவாள்.

இந்த சந்தையை உயர்த்த இன்று ஏஜெண்டுகள் புற்றீசல் போல் வளர்ந்து வருகின்றனர். இது பெண்களை சந்தையாக்கும் எளிமையான தொழிலாக்கப்பட்டுவருகின்றது. அழகிப்போட்டி, சந்தையை விருத்தி செய்யும் ஒரு



படிப்பகம்

www.padippakam.com

கருவியாக்கப்பட்டுள்ளது. கல்லூரிகள், பள்ளிகள், தொழிற்சாலைகளில் பன்னாட்டு கம்பெனிகளின் மதிப்பை பெருக்க, இலாபமடைய அழகிப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

1997 ஆம் ஆண்டு உலக அழகிப் போட்டி இந்தியாவில் பெங்களூரில் அமிதாபச்சன் கார்ப்பரேசனின் தலைமையில் நடைபெறுவதாக இருந்த போது, 'கோத்ரேஜ்' அலுவலகத்தை கர்நாடகத்தை சார்ந்த 'மகிளா ஜாகிருதி' அடித்து நொறுக்கியது. அப்போது அப்பெண்கள் கைது செய்யப்பட்டு ஏறத்தாழ ஒரு மாதம் சிறையிலடைக்கப்பட்டனர். மேலும் அழகிப் போட்டியை எதிர்த்து நடந்த சாலை மறியலை இராணுவத்தைக் கொண்டு இந்திய அரசு ஒடுக்கியது. இத்தருணத்தில் பன்னாட்டு கம்பெனி எஜமானர்களுக்கு சேவை செய்துவரும் இந்திய ஆளும் வர்க்கம் அம்பலப்பட்டு நின்றது.

மேலும் விளம்பரங்களில் பெண்ணை அரை நிர்வாணமாய் சித்தரித்து கோடி கோடி இலாபமடைய பன்னாட்டு நிறுவனங்கள் துடிக்கின்றனர். ஃபாசோப்பு, காண்டம்ஸ் விளம்பரங்கள் என்று எண்ணிலடங்கா விளம்பரங்களில் பெண்கள் ஆபாசமாக சித்தரிக்கப்படுகின்றனர். இது மட்டுமில்லாமல் ரெவ்லான் போன்ற நுகர்வு பொருள் பெண்களின் உடலை வெகுவாக பாதிக்கின்றன.

கடற்கரைப் பகுதிகளில் வெளிநாட்டவரின் காம இச்சையைப் பூர்த்தி செய்ய பாலியல் தொழில்கள் பெருகியுள்ளன. கடற்கரையோர ஹோட்டல்களின் வியாபாரத்தைப் பெருக்க பாலியல் தொழில் துரிதமாக செயல்படுத்தப்படுகின்றது.

## பெண்கள் வணிகமயமாக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள்

1. பெண்களை நுகர்வு பொருளாக்குவது அதிகரிக்கின்றது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிக்கின்றது.
2. பாலியல் கொடுமைகள் அதிகரிப்பதால் ஒன்றரை வயது முதல் 12 வயதுக்குள் உள்ள இளம் பிஞ்சுகள் கூட பாலியல் வன்முறைக்கு இரையாவது அதிகமாகியுள்ளது.
3. பாலியல் வன்முறைகளை, பெண்களை நிர்வாணமாக்கி வீடியோ எடுத்து விற்பது, ஏற்றுமதி செய்வது அதிகமாகியுள்ளன.
4. அழகுக்கான முக்கியத்துவம் வலியுறுத்தப்படுவதால், பெண்களின் முகங்களில் அமிலம் தூவுவது அதிகமாகியுள்ளது.

ஆட்சி அரியணையில் உள்ள பி.ஜே.பி அரசாங்கம், பெண்களை வணிகமயமாக்குவதை துரிதப்படுத்தியுள்ளது. பெண்ணாக பிறப்பவள் என்றோ பாலியல் வன்முறை செய்யப்படும்போது நஷ்டஈடு பெற எல்.ஐ.சி பாலிசி எடுக்கவேண்டும் என்று பெண்களுக்கெதிரான பல திட்டங்களை அறிவித்துள்ளது.

இந்த சமூக அமைப்பை மாற்றியமைத்தால் தான், பெண்களை வணிகமயமாக்குவது போன்ற கொடுமைகளை முடிவுக்குக் கொண்டு வரமுடியும்!



படிப்பகம்

www.padippakam.com

## எதிரொலிப்பு

(நண்பர்களே! இன்றைய பிற்போக்கு சீரழிவு சமூகத்தில் பெண்ணாகப் பிறக்கும் ஒவ்வொருவரும் பல பிரச்சனைகளை எதிர்கொள்வது என்பது தினசரி நிகழ்ச்சியாகிவிட்டது! தாங்கள் சந்தித்த பிரச்சனைகளை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று பலமுறை நினைத்திருக்கலாம். ஆனால், பல சமயங்கள், பகிர்ந்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்காமல், மனதிற்குள்ளே புழுங்கிக் கொண்டு அவதிப்பட வேண்டியிருக்கும். ஆனால், தாங்கள் எதிர்கொண்ட பிரச்சனைகளையும், அதை தீர்க்க மேற்கொண்ட வழிகளையும் பகிர்ந்துக் கொள்ளும் காலம் தான் 'எதிரொலிப்பு' காலம்! உங்களுக்கான இந்தக் காலத்தில், யதார்த்தவாதி என்பவர் தன் மனதில் புழுங்கிக் கொண்டிருந்த விஷயங்களை பிரசுரிக்கிறோம்).

*ஆசிரியர்*

# தியேட்டர் அட்டகாசம் : பெண்கள் புலம்பல்

தியேட்டர் 'சாரதா' வில் படம் பார்க்கவரும் வாடிக்கையாளர்களிடம் விசாரித்ததில் கிடைத்த தகவல் 3.50 என்று சீட்டில் அச்சிட்டு இவர்கள் வசூலிப்பது ஐந்து ரூபாய் அல்லது 6 ரூபாய். 'நெகமம்' என்ற ஊரில் உள்ள 'KVK' தியேட்டரிலும் இதே நிலைதான். இங்கு சீட்டில் அச்சிடுவது இரண்டு ரூபாய். ஆனால், வாடிக்கையாளர்களிடம் வசூலிப்பது 7 ரூபாய்.

இந்த இரண்டு தியேட்டர்களிலும் பெண்கள் படம் பார்க்கும் ஆசையை விட்டு விடுவது நல்லது. ஏனென்றால் நிர்வாகம் சரியில்லை. சீட்டு கொடுக்கும் ஆளிலிருந்து கேட்டில் நின்று சீட்டு கிழிக்கும் ஆள்வரை; பெண்களைக் கண்டால் கிண்டல். தியேட்டரில் அமைதி என்பதை எதிர்பார்ப்பது கஷ்டம். திரையில் படம் விழுந்த உடன் ஆரம்பிக்கும் கலாட்டா படம் முடியும்வரை தொடரும். வாயில் கொச்சை வார்த்தைகள். பெண்கள் அங்கங்களைப் பற்றிய பச்சையான பேச்சுக்குரல்கள். இப்படி படம் பார்க்க வரும் இளைஞர்கள் போடும் கூச்சல் வார்த்தைகள் பெண்களை மன கஷ்டத்தில் ஆழ்த்துகிறது.

இவர்கள் தியேட்டரில் போடும் கூச்சல் தியேட்டரையொட்டி உள்ள ஆபிசில் இருக்கும் நிர்வாகிகளுக்கு கேட்காமலா இருக்கும்? நன்றாகவே கேட்கும். அவர்கள் இதை ரசித்துக் கேட்பார்கள். பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனித்தனியாக பென்ச்சுகளும், சேர்களும் போட்டிருக்கும். ஆனால், நிர்வாகிகள் அவரவர் விருப்பத்திற்கு அமர அனுமதியளிப்பார்கள். பின்னால் அமரும் ஒரு வாலிபன்



படிப்பகம்

www.padippakam.com

முன்னால் இருக்கும் பெண்களின் புடவையை இழுப்பது, முடியை இழுப்பது, அமர இடம் தராமல் நீட்டிப்படுப்பது, போன்ற அட்டகாசங்களை தாங்க முடியவில்லை என்பது இங்கு படம் பார்க்க செல்லும் பெண்களின் புலம்பல்!

KVK தியேட்டரில் இன்னும் ஒருபடி மேலாக 'ப்ளூ பிலிம்' காட்டப்பட்டு வருகிறது. அப்பட்டமாக நிர்வாண போஸ்டர்கள் பஸ்டாண்ட் முதல் பள்ளி வரை ஒட்டப்பட்டுள்ளது. மேலும் 'ப்ளூ பிலிம்' பார்க்க வரும் இளைஞர்கள் 10.30, 2, 7, 11 இந்த காட்சிகளுக்கு வரும் பெண்களை கலாட்டா செய்வது இந்த தியேட்டரின் வாடிக்கை. கலாட்டாவிற்கு பேர் போன தியேட்டர் KVK என்பது அரசல் புரசலான செய்தி. வெளியில் இருந்து பார்க்க பந்தாவாக இருக்கும் இத்தியேட்டரில் ஒரு நல்ல கழிப்பிடம் கூட கிடையாது.

இதற்கெல்லாம் காரணம் நிர்வாகிகளின் பொறுப்பற்ற செயலே ஆகும். KVK போன்ற தியேட்டர் முதலாளிகள் அரசியல் பலத்தினால் இத்தகைய தீய காரியங்களில் ஈடுபடுகின்றனர். 'ப்ளூ பிலிம்' தடை செய்யக்கோரி பல பெண்கள் இயக்கங்கள் ஆர்பாட்டம் செய்யும் காலக்கட்டத்தில் இந்த தியேட்டருக்கும் ரூபா, தீபா தியேட்டருக்கு நடந்த அபிஷேகம் நடக்கும் என்பது சந்தேகம் இல்லை.

இவை தொடர்ந்தால் பூனைகளைப் போல் போகும் பெண்கள் புலிகளாக மாறி தியேட்டரில் உள்ள நிர்வாகிகளை நார்நாராகக் கிழிப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

*யதார்த்தவதி*

## எரிக்கும் சிவப்பு

*அந்தி வான சிவப்பு*
*அரக்காய் சிவந்த மருதாணி*
*நடுவாசலில் கொட்டிய ஆரத்தி*
*நெற்றியில் இட்ட குங்குமம்*
*இப்படி எந்த சிவப்பை பார்த்தாலும்*
*வரதட்சணை கொடுமையால்*
*பற்றியெறிந்த என் சகோதரிதான்,*
*தெரிகிறாள் !*

*— முகிலன்*



படிப்பகம்

www.padippakam.com

# அடுப்பங்கரை

● காலைக் கதிரொளி
குளிர்காற்றுடன் பூரிப்பூட்டும்
கண் திறந்தும்
கலையாத உறக்கம்
மனம் லயிக்கையில்
'அடுப்பங்கரை' நினைவில்
அனல் காற்றை வீசும்

● காலையில் கணவனை
எழுப்பும் டீ!
குழந்தைகளை குளிப்பாட்டும்
வெந்நீர்!
சமையலில் கூடிய உப்பு
திட்டித் தீர்க்கும்
எரிந்த மனநிலையில்
எல்லா வேலைகளையும்
முடித்தாயிற்று
கணவனின் கால் 'சூ'
கழற்றுதல் வரை.

● வயதுவந்த நாள்முதல்
வந்துவிட்ட இந்நாள்வரை
செய்து பழகி,
செய்து பழகி
இப்போதெல்லாம்
இவை அனிச்சை செயல்.

● உறங்கச் செல்லும்
ஒவ்வொரு இரவும்
மனம் கேட்கிறது
வாழ்வியலில் இன்று
பெற்ற
வளர்ச்சி என்ன?

● கேள்வியில் ஆழ்கையில்
உணர்கிறேன்
ஒவ்வொரு நாளும்
நான் விடைசொல்ல
விரும்பாததை!

● இப்போது தான்
உறைக்கிறது
'உளுத்த புண்ணை ஆற்ற
எரிக்கும் மருந்து
அவசியமென்று'

—பாண்டியன்

## — அரசியல் —

எத்தனை சட்டைகள் மாற்றுவது?

சலித்துக் கொண்டது,

சோளக் கொல்லை பொம்மை!

— பூங்குழலி

## தொழிற்கல்வி

மழலைக்கும்

தொழிற் கல்வி

முதுகில் மூட்டை!

— பூங்குழலி



படிப்பகம்

www.padippakam.com

# நேபாள விடுதலை இயக்கத்தில் பெண்களின் பங்கு

'ஆகாயத்தில் பாதி பெண்களுடையதே' பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் குறிப்பாக 1815ஆம் ஆண்டு நடைபெற்ற நிலப்பிரபுத்துவ அரசு விரிவாதிக்க முயற்சியின் விளைவான நாலாபாணி (டேரா. டூனில் இருந்தது. பின்பு வட இந்தியாவில் இணைக்கப்பட்டது.) போரிலிருந்து நேபாள விடுதலை இயக்கத்தில் பெண்கள் தீவிர பங்காற்ற ஆரம்பித்தனர். இப்போரில் நேபாள பெண்களும் குழந்தைகளும் ஆண்களோடு தோளோடு தோளாக நின்று, தங்கள் எண்ணிக்கையைக் காட்டிலும் பன்மடங்கு எண்ணிக்கையில் ஆட்களையும் நவீன ஆயுதங்களையும் கொண்ட பிரிட்டிஷ் படையை எதிர்த்து தீரத்துடன் போராடினர். பெரும் இழப்புகளுக்குப் பின், மூன்றாவது முறை தான் பிரிட்டிஷ் இராணுவம் கலங்கா கோட்டையை கைப்பற்றியது.

அதுபோலவே, 1947–50 காலகட்டங்களில் இராணா எதிர்ப்பு இயக்கத்தில், அணிதிரண்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் சார்பில் பெருந்திரளான பெண்கள் பங்கேற்று நடத்திய போராட்டத்தின் விளைவாக, 1950–ல் இராணா ஆட்சி முடிவுக்கு வந்தது. 1990–ல் முப்பது வருட கால 'பஞ்சாயத்து' என்ற பெயருடைய ஒரே கட்சியின் சர்வாதிகார மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த ஜனநாயக இயக்கத்தில் பெண்கள் தீவிர பங்காற்றி, பாராளுமன்ற மன்னராட்சி அமைப்பை உருவாக்கினர். இந்த இயக்கங்களில் பங்கேற்ற பெரும்பான்மையான பெண்கள் பிரபலமான அரசியல் குடும்பங்களையும் நகரத்தை சார்ந்த கல்வியறிவு பெற்ற குடும்பங்களையும் சேர்நதவர்கள்.

நேபாள கம்யூனிஸக் கட்சியின் தோற்றத்திற்குப் பின்னர்தான் அடித்தட்டு வர்க்கப் பெண்கள் குறிப்பாக, கிராமப்புறப் பெண்கள் அமைப்பிற்குள் வரலாயினர். இன்று இப்பெண்கள் திறன் பெற்ற போராளிகளாக திகழ்கின்றனர். முன்பு அரசியல் இயக்கங்களால் வெறும் உதவியாளர்களாகவும், ரிசர்வ் படையினராகவும் மட்டுமே கருதப்பட்டு வந்த பெண்கள், இன்று போராட்டக் களத்தில் தலைவர்களாக உள்ளனர்.

1960–ஆம் ஆண்டு நேபாள அரசால் இயற்றப்பட்ட சட்டத்தின் பத்தாம் பிரிவின்படி, இராணுவத்தில் பெண்களை சேர்ப்பது தடை செய்யப்பட்டது. அரசு பெண்களை இருவிதமாக ஒடுக்குவதை அறிந்த கம்யூனிஸக் கட்சி, இன்றைய மோசமான நிலைக்கு காரணமான சமூக அமைப்பை எதிர்க்க பெண்கள்



படிப்பகம்

www.padippakam.com

வீறுகொண்டு எழுவார்கள் என்று அறிந்து, அவர்களது ஒடுக்கப்பட்ட சக்தியை அணி திரட்டுகின்றது.

பெண் போராளிகள் போராட்டக் களத்தில் நின்று சமூகத்தின் / அரசின் ஒடுக்குமுறைகளை எதிர்த்துப் போராடுவது மட்டுமல்லாமல், பிரச்சாரம் மற்றும் உற்பத்தி வேலைகளையும் செய்து வருகின்றனர். ஒவ்வொரு கிராமத்திலும், பகுதியிலும், மாவட்டத்திலும் பெண்கள் அணிதிரட்டப்படுகின்றனர்.

புரட்சிகர இயக்கங்கள் வலுவாக உள்ள பகுதிகளில் மக்கள் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, மற்ற வழக்குகளுடன் பெண்களின் சுரண்டலுக்கெதிரான வழக்குகளும் விசாரிக்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்படுகின்றன. கிராமப் பாதுகாப்புக்குழு, பெண்கள் அமைப்பு, மக்களமைப்புகள் ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால் இவ்வழக்குகள் விசாரணைக்கு கொண்டுவரப்படுகின்றன.

விதவைகள், தனிப் பெண்கள் ஆகியோரது நிலங்கள் அநியாயமாக பாதிக்கப்படுவது குறித்த பல வழக்குகள் இத்தகைய நீதிமன்றங்களில் நடத்தப்பட்டு, நிலங்க்ள் பாதிக்கப்பட்ட பெண்களுக்கே மீண்டும் அளிக்கப்படுகின்றன.

குடித்துவிட்டு மனைவியை அடிக்கிற, வேறு பெண்களுடன் தொடர்பு கொள்கிற, பெண்களை பாலியல் ரீதியாக சுரண்டுகிற ஆண்களை இந்த நீதிமன்றங்கள் ஒழுங்குக்குக் கொண்டு வருகின்றன. பார்வதி மாவட்டத்தில் நடந்த ஒரு ஸ்வாரசியமான வழக்கை இங்கு குறிப்பிடலாம்.

பள்ளி ஆசிரியர் ஒருவர், தக்க கணவனை தேடித் தருவதாகச் சொல்லி பெண்களை பாலியல் சுரண்டலுக்கு ஆட்படுத்தியுள்ளார். இவர் மக்கள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு பல நிமிடங்களுக்கு தோப்புக்கரணம் போட்டு, செய்த குற்றத்திற்கு மன்னிப்பு கோரும்படி நிர்பந்திக்கப்பட்டார். தொடர்ந்து குற்றம் செய்தால், தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற எச்சரிக்கையுடன் அவர் விடுவிக்கப்பட்டார்.

நேரடியாக போராட்ட களத்தில் ஈடுபட இயலாத பெண்கள் விடுதலைப் போரின் ஆதரவு சக்தியாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அமைப்பாளர்களாக, பிரச்சாரம் செய்பவர்களாக, பண்பாட்டு போராளிகளாக, தேவையான பொருட்களனைத்தும் ஏற்பாடு செய்பவர்களாக, காயமுற்ற போராளிகளுக்கும், செயல்வீரர்களுக்கும் செவிலியர்களாக, உளவு பார்ப்பவர்களாக, செயல்வீரர்களுக்கும், போராளிகளுக்கும் பாதுகாவலர்களாக, சிறைகளிலும் தியாகிகளின் குடும்பங்களிலும் அவ்வப்போது விஜயம் செய்து அவர்களுக்கு உத்வேகம் ஊட்டுபவர்களாக என பெண்கள் பல்வேறு பணிகளை செய்து வருகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

பெண்கள் பொதுவாக வீடு என்ற நான்கு சுவர்களுக்குள்ளேயே முடக்கப்பட்டிருப்பதால், பெண் போராளிகள் பெண்களை வீட்டில் சந்தித்து பேசி மக்களை அணிதிரட்டி, மிக வெற்றிகரமான பங்காற்றுகின்றனர்.

இதனால் புதிய பகுதிகளில் ஆண் செயல்வீரர்கள் எவ்வித பிரச்சனையுமின்றி வீடுகளில் புழங்க ஏதுவாகிறது. எங்கெல்லாம் பகுதி சார்ந்த பெண்கள் அணி திரட்டப்பட்டனரோ, அங்கெல்லாம் இயக்கம் நிலையான தளம் அமைப்பது என்பது சாத்தியமாகியுள்ளது.

நேபாள விடுதலை இயக்கத்தில் பெண்கள் முதலில் சேருவதற்கு அதிக நேரம் எடுத்துக் கொண்டாலும் முடிவு எடுத்தபின் இயக்கத்துடன் இணைந்து நிற்பதில் ஆண்களைவிட பெண்களே அதிக உறுதியுடையவர்களாக இருப்பது நிரூபிக்கப்பட்டு வருகின்றது. சரணடைதல், போராட்டக்களத்தை விட்டு ஓடிப்போதல் போன்றவை பெண்களை பொறுத்தவரை மிக மிக அரிது. எதிரியின் கையில் அகப்பட்டாலும் கட்சி இரகசியங்களை எளிதில் பெண்கள் வெளிச்சொல்வதில்லை. ஆண்களைக் காட்டிலும் கோட்பாடு ரீதியிலான கல்வி அறிவில் குறைந்தவர்களாக இருப்பினும், பெண்கள் ஆண்களைவிட மிகச் சிறப்பான விடாமுயற்சியும், பொறுமையும் கொண்டவர்கள் என்று தெளிவாகி வருகின்றது.

இவ்விடுதலை இயக்கத்தினால் ஆண்களை விட பெண்களே அதிகமாக பயனடைகின்றனர் என்பது இதற்கு காரணமாக இருக்கலாம். பெண்களைப் பொறுத்தவரையில் விடுதலை என்பது வர்க்க ஒடுக்குமுறையிலிருந்தும் பால் ஒடுக்குமுறையிலிருந்தும் பெறும் விடுதலையே. இரட்டை விலங்குகளை உடைத்தெறிய அதிக வலிமையும், அசைக்க முடியாக மனத்திண்மையும் தேவையல்லவா?

### *போராடும் பெண்கள் மீது அரசின் காட்டுமிராண்டி நடவடிக்கைகள் :*

நேபாள விடுதலை இயக்கத்தில், பெண்கள் பல்வேறு நடவடிக்கைகளில் தனித்திறமை கொண்டு விளங்குவதையும், அரசின் ஒடுக்குமுறைகளையும் கீழ்வரும் நிகழ்ச்சிகளிலிருந்து பார்ப்போம்.

*லாலிரோகா :* ரோல்பா என்ற பின்தங்கிய மாவட்டத்தில் சுகாதார பணியாளராக வேலை பார்த்த இவர், ஒரு சமூக போராளி. அப்பகுதியில் செயல்பட்ட ஒரு அரசு சாரா நிறுவனத்தின் சீர்திருத்த நடவடிக்கைகளை தோலுரித்துக் காட்டிய ஒரே தவறுக்காக அவர் வேலை பார்த்த சுகாதார நிலையத்திலிருந்து கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

*பிந்தியா செளலகை :* போராளிகளுக்கு உணவளித்தற்காக போலீஸ் பாதுகாப்பில் சித்ரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட இவர், ஒரு நிறைமாத கர்ப்பிணி. சித்ரவதையின் காரணமாக அகாலமாக வெளிவந்த குழந்தையும் இறந்து, இவரும் ஒருசில நாட்களில் இறந்துபோனார்.

*சுன்சரோ புத்தர் :* போராளியின் மனைவியான இவர், தனது இரண்டு வயதுக் குழந்தையின் கண்முன்னே சித்ரவதை செய்யப்பட்டார். கணவரின் இருப்பிடம் பற்றி இவர் தகவல் சொல்லாததால் குழந்தையும் சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டது. இதற்குப் பின்னும் தகவல் சொல்லாததால், போலீஸ் இவரை குரூரமாக கொன்றது.

*கமலா பட்டா :* நேபாள புரட்சிகர பெண்கள் அமைப்பின் தலைவரும், ஆசிரியருமான இவர், கிராமத்துப் பெண்களிடையே பணி செய்துவிட்டு திரும்பும்போது நேபாள சிறப்பு ஆயுதப்படை போலீஸாரால் வன்புணர்ச்சி (கற்பழிப்பு) செய்யப்பட்டு, பின்பு கொல்லப்பட்டார்.

*தேவி காட்கா :* அரசின் காட்டுமிராண்டித்தனமான ஒடுக்குமுறையை வெளிப்படுத்தும் ஒரு வாழும் குறியீடாகவே இவர் இருக்கிறார். போலீஸ் பாதுகாப்பில் இருந்தபோது, பலமுறை பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டதில் இவரின் கர்ப்பப்பையே கிழிந்துவிட்டது. சிறையில் குற்றுயிராய் வாடிக் கொண்டிருக்கும் தனது தம்பியின் மரண சான்றிதழில் கையெழுத்திட மறுத்ததற்காக இவர் பாலியல் வன்முறைக்கு இரையாக்கப்பட்டார். இத்துணை கொடூரத்திற்கு இரையாக்கப்பட்டிருப்பினும் அரசின் கொடூர காட்டுமிராண்டித்தனத்துக்கு அஞ்சாமல் இன்றும் மிக ஊக்கத்துடன் விடுதலைப் போரில் பங்காற்றி வருகிறார்.

*சினியா லாமா, நிர்மலா தேவ்கோடா, மஞ்சு குவார், சுவுத்ரா சப்கோடா* ஆகியோர் கிராமத்து மக்களை புரட்சிகர பண்பாட்டின் கீழ் அணி திரட்டியதற்காக போலீஸாரால் கொல்லப்பட்டனர்.

மேற்சொன்ன நிகழ்ச்சிகளைத் தவிர கூட்டம் கூட்டமாகப் பெண்களை வன்புணர்ச்சி செய்வது, ஹெலிகாப்டர் மூலம் பெண்களைக் கடத்தி வேறு இடத்திற்கு கொண்டு சென்று வன்புணர்ச்சி செய்து கொலை செய்வது போன்றவை புரட்சிகர



பல்வேறு பாதுகாப்பு சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்ட பெண்கள்



படிப்பகம்

www.padippakam.com

இயக்கம் வலிமையாக உள்ள இடங்களில் நிகழ்ந்துள்ளன. ஆரம்பகட்டத்தில் பெண்கள் சித்ரவதைக்கும், பாலியல் வன்முறைக்கும் ஆளாக்கப்பட்டனர். ஆனால், இன்று அவர்களை கொல்வதுதான் வழக்கமாக உள்ளது.

பெண்கள் உறுதி குலையாது போராடும் சக்தி என்பதை இராணுவப் படையினர் உணர்ந்திருப்பதையே இது காட்டுகிறது. அதிகரித்துவரும் பெண்களின் மீதான அரசின் ஒடுக்குமுறையும், விடுதலைப்போரில் பெண்களின் உறுதியான செயல்பாட்டையும் நிரூபிக்கின்றது.

## *கம்யூனிஸக் கட்சி பெண்களிடையே ஏற்படுத்திய மாற்றங்கள்:*

'மக்கள் போராட்டமே முழு முற்றான போராட்டம்' — *மாவோ*

நேபாள கம்யூனிஸக் கட்சி பெண்களின் வாழ்வில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அடிப்படையான குடும்ப உறவுகளில் மாற்றங்கள் நேர்ந்துள்ளதை போராளிகளின் குடும்பங்கள் காட்டுகின்றன. கட்சியின் தற்போதைய புதிய தலைமை உருவாவதற்கு முன்பு, குடும்பத்திலும் சமூக வாழ்விலும் பாலினம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை அணுகுவதில், தத்துவார்த்த ரீதியிலும் செயல்பாட்டு ரீதியிலும் முரண்பாடுகள் காணப்பட்டன.

உதாரணமாக, ஆண் வாரிசுகளையே விரும்புதல், பெண்களுக்கு சிறு வயதிலேயே திருமணம் செய்தல், பெண்களுக்கு கறாரான ஒழுக்க விதிகளை விதித்து, ஆண்கள் மட்டும் பல பெண்களுடன் உறவு கொள்ளுதல், விசேஷ நாட்களில் விரதம் இருத்தல், மாதவிடாய் சமயத்தில் பெண்களை தள்ளி வைத்தல், கீழ் சாதியினரை தீண்டத்தகாதவராக மதித்தல், தனி சொத்தின்மீது அதீத பிடிப்புடன் இருத்தல், பெண்களை வீட்டு வேலைகளுக்கென ஒதுக்கிவிட்டு ஆண்கள் மட்டும் அரசியலில் பங்கேற்றல் ஆகிய அனைத்து நிலப்பிரபுத்துவ பண்பாட்டு மதிப்பீடுகளும் சமூகத்தில் நிலவி வந்தன.

ஆனால், இன்று கட்சியின் புதிய தலைமையின் கீழ் தங்கள் குழந்தைகளையும் மாற்று ஆதரவு அமைப்புகளிடம் ஒப்படைத்துவிட்டு பெண்களும் தங்கள் கணவர்களுடன் வீட்டைத் துறந்து இயக்கத்தில் சேருகிறார்கள். கட்சியின் அரசியல் படுத்தும் முயற்சிகளாலும் ஒட்டுமொத்தமாக வளர்ந்து வரும் அரசியல் சூழல்களாலும், வீட்டிலேயே இருந்து கொள்ள முடிவு செய்யும் பெண்கள் கூட மேலும், மேலும் பொருளாதார ரீதியில் விடுதலை பெறுவதும் அரசியல் அறிவு பெறுவதுமே இன்றைய நிலை. அடுத்தடுத்த தேடுதல் நடவடிக்கைகள், பிடி வாராண்டுகள், எச்சரிக்கைகள், சித்ரவதைகள், வன்புணர்ச்சிகள் ஆகியவை அப்பெண்களை மேலும்



படிப்பகம்

www.padippakam.com

உறுதியானவர்களாகவும் அரசு இயந்திரத்தை எதிர்த்து போராடுபவர்களாகவுமே மாற்றியுள்ளது. இத்தகைய அரசு ஒடுக்குமுறைக்கு இரையாகும் குழந்தைகளும் சிறு வயதிலேயே அரசியல் அறிவு பெற்று விடுகின்றனர். கிராம பாதுகாப்பு குழுக்களின் மூலம் பண்பாட்டு நிகழ்ச்சிகளிலும், பிரச்சாரம் மற்றும் உளவு வேலைகளிலும் பெண்கள் தீவிர பங்காற்றுகின்றனர்.

புரட்சிகர இயக்கம் வலுப்பெற்ற இடங்களில் போலீஸின் தொல்லைகளால் ஆண்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டியுள்ளதால், பெண்களும், குழந்தைகளும் தங்கள் உடமைகளை காப்பாற்றிக் கொண்டு, போலீஸ் ஒடுக்குமுறையையும் எதிர்கொள்ள நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

ஆண்கள் இல்லாத குடும்பங்களில், பாலின அடிப்படையிலான வேலைப் பிரிவினை முறியடிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, மத ரீதியில் பெண்கள் நிலத்தை உழுவது தடுக்கப்பட்டதை மீறி, இன்று பெண்கள் நிலத்தை உழுகிறார்கள். பண்பாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்படாத கூரை வேயும் வேலையையும் பெண்களே செய்கின்றனர்.

புரட்சிகர பகுதிகளில் உள்ள பெண்கள் போலீஸால் தங்கள் கணவர்கள் கொல்லப்படும்போது, விதவையாகும் சடங்கிற்கு ஆட்பட மறுக்கிறார்கள். அவர்களது துக்கத்தை வலிமையின் ஊற்றாக, போராட்டத்தின் சக்தியாக மாற்ற கட்சி ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்கிறது. சமீப காலங்களில், பெண்களின் இத்தகைய சூளுரைகளை செய்தித்தாள்களும் தெரிவிக்கின்றன.

நேபாளத்தில் 'தீஜ்' என்ற பெயரில் மணமான பெண்கள் கணவரின் நீண்ட ஆயுளுக்காகவும், மணமாகாத பெண்கள் நல்ல கணவனை வேண்டியும் ஒரு நாள் முழுவதும் பட்டினியாக விரதம் இருந்து நிலவு உதித்த பின் உண்டு ஆடல் பாடல்களில் ஈடுபடுவது வழக்கம். இந்த பிற்போக்கான இந்து மத சடங்கை கட்சியின் ஆதரவு மேடையாக்கப்பட்டு, நேபாள அரசின் ஒடுக்குமுறையை அம்பலபடுத்தும் சந்தர்ப்பமாக இது மாற்றப்பட்டது.

முன்பு, வன்புணர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்கள் சமூகத்தால் விலக்கி வைக்கப்பட்ட நிலைமாறி, இன்று வன்புணர்ச்சியும், கொலையும் புரட்சிகர இயக்கங்களை ஒடுக்க அரசு நிறுவனங்கள் கையாளும் கொடூரமான வழிமுறைகள்தான் என்பதை பெண்கள் தெளிவாக புரிந்து கொள்கின்றனர்.

முன்பு அவமானத்திற்குரியதாக இருந்த அந்நிகழ்ச்சிகள் இன்று வர்க்க வெறுப்புக்கும், கொடுமைக்கும் எதிரான போராட்டங்களுக்கு அடித்தளமாக அமைகின்றன. போலீஸின் வரைமுறையற்ற பாலியல் வன்முறையைக் கண்டு,



படிப்பகம்

www.padippakam.com

ஆளும் வர்க்க பெண்களுக்குக்கூட அரசின் மீதான வெறுப்பு அதிகமாகின்றது. இந்த அடக்குமுறைகள் பெரும்திரளான ஒடுக்கப்படும் மக்களை போராட்டப் பாதையில் அணிதிரள ஊக்கமளிக்கின்றது.

கட்சியின் புதிய தலைமை உத்வேகமுள்ள இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் புதியதொரு புரட்சிகர மாற்றுவாழ்வை அளிக்கிறது. பெண்களின் வாழ்க்கை – குறிப்பாக கிராமப்புற பெண்களின் வாழ்க்கை ஒரே மாதிரியான மறு உற்பத்தி செயல்பாடுகளையே கொண்ட சுவாரசியமற்ற வாழ்க்கையாகும். சிறு வயதிலேயே திருமணங்கள் செய்யப்படுவதால், இத்தகைய துன்பகரமான வாழ்க்கை வட்டத்திலிருந்து தப்பிக்க முடியாமல் இப்பெண்கள் தவிக்கின்றனர். கிராமத்தை விட்டு வெளியேறுவது என்றால் விபச்சாரத்தில் ஈடுபடுவது (அல்லது) இந்தியாவிற்கு கடத்தப்படுவது (இந்தியாவின் நகரங்களில் ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் நேபாளப் பெண்கள் கடத்தி வரப்பட்டுள்ளவர் என்று கணக்கிடப்பட்டுள்ளது!) அல்லது குறைந்த கூலிக்காக கடினப்படுவது என்று அர்த்தமாகின்றது.

இத்தகைய ஒடுக்குமுறையிலிருந்து விடுபட நினைக்கும் உத்வேகமுள்ள பெண்களுக்கு, கட்சியானது ஆண்களுடன் தோளோடு தோள் நின்று சமமாக பணி செய்யவும், தங்கள் மன–உடல் உறுதியை நிரூபிக்கவும் சவாலான சந்தர்ப்பங்களை அளிக்கின்றது.

கணவர்களால் கைவிடப்பட்ட பெண்கள், ஏமாற்றப்பட்ட பெண்கள், தெருவில் தூக்கியெறியப்பட்ட பெண்கள், தங்களை திருமண சந்தையில் விற்றுக் கொள்ள இயலாத பெண்கள் என சமூகத்தால் கைவிடப்பட்ட பெண்களை ஆதரித்து கவுரவமான மாற்று வாழ்க்கை முறையை கட்சி அளிக்கிறது.

கட்சிக்கு பல்வேறு தளங்களில் உதவும் இப்பெண்கள், சமூகம் தம்மீது திணித்த சாவைக் காட்டிலும் போராட்ட களத்தில் தீரத்துடன் இறப்பது தமக்கு உவப்பாக உள்ளதாக நினைக்கின்றனர்.

மக்கள் வாழ்வில் முற்போக்கான நியதிகளை புகுத்துவதில் கட்சியின் பங்கு மிக அதிகம். இன்றைய புதிய தலைமுறையை சார்ந்த பெண்கள் பெற்றோர்கள் நிச்சயிக்கும் மரபான திருமணங்களை வெறுத்து, கொள்கை அடிப்படையிலான காதல் திருமணங்களையே வரவேற்கின்றனர். முன்போல் அவர்கள் ஆண் குழந்தைகளுக்காக தலைகீழாக நிற்பதில்லை. புரட்சிகர நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுவதற்காக ஒன்றிரண்டு குழந்தைகளுடன் நிறுத்திக் கொள்கின்றனர்.

*(அடுத்த இதழில் தொடரும்)*



படிப்பகம்

www.padippakam.com



## தொழிற்சாலைகளில் பெண்களுக்கு இரவு நேர வேலை!

இந்திய அரசின் தனியார்மயம், தாராளமயம் போன்ற மக்கள் விரோதக் கொள்கையினால், இந்தியாவில் பல தனியார் நிறுவனங்கள், பன்னாட்டு கம்பெனிகள் உழைக்கும் மக்களின் இரத்தத்தையும், வியர்வையையும் குறைந்த கூலிக்கு சுரண்டி கொழுக்கின்றன. தொழிற்சாலைகளில் தொழிலாளிகள் எட்டு மணி நேர வேலை மட்டுமே செய்ய வேண்டும் என்ற தொழிலாளர் சட்டத்தை ஏற்கனவே காலில் போட்டு மிதித்து வரும் இந்த பெருச்சாளிகள் கூட்டம். ஆண்கள் மட்டும் இரவு வேலை செய்வதால் பெண்களின் உழைப்பை இரவில் சுரண்டுவது இயலாததாகி விடுவதால் அவர்களுடைய இலாபம் குறைகின்றது. எனவே, தங்களுடைய இலாப வேட்டையை விரிவுபடுத்த பெண்களை இரவு நேர வேலையில் அமர்த்துவது குறித்து சில காலங்களுக்கு முன்பே அறிவிப்பு செய்தது. இந்த அறிவிப்பை தற்போதைய நீதிமன்றத் தீர்ப்பு ஊர்ஜிதப்படுத்தியுள்ளது!

ஆம்! இரவு ஏழு மணி முதல் காலை ஆறு மணி வரை பெண்கள் தொழிற்சாலைகளில் பணிபுரியக் கூடாது என்ற தொழிலாளர் சட்டம் தவிடு பொடியாக்கப்பட்டுள்ளது! இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 14 படி 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்ற சட்டப்பிரிவை தனக்கு சாதகமாக்கி பெண்களின் உழைப்பை இரவு நேரத்தில் சுரண்ட நீதிமன்றத்தில் முதலாளிகள் கூட்டம் லைசன்சு வாங்கியுள்ளது! இத்தீர்ப்பின் மூலம் நீதிமன்றம், இரவில் பெண்களின் உழைப்பை சுரண்ட, பாலியல் ரீதியாக சுரண்ட முதலாளிகள் கூட்டத்திற்கு முழு சுதந்திரம் கொடுத்துள்ளது!

ராக்கெட் போல் ஏறிவரும் விலைவாசியால் அதிகரித்துவரும் வீட்டின் பொருளாதார சிக்கலை குறைக்க, 18–25 வயதுள்ள பெரும்பான்மையான அடிப்படை வர்க்க பெண்கள் ஏற்றுமதி நிறுவனங்களில் குறைந்த கூலிக்கு 12 மணி நேர வேலை செய்து வருகின்றனர். இங்கு பல இன்னல்களை சந்தித்து வருகின்றனர். மேற்பார்வை என்ற பெயரில் ஜொள்ளு விடும் சூப்பர்வைசர்கள், காசு வாங்கும்போது கொஞ்ச நினைக்கும் கேசியர்கள், கற்றுத் தருகிறேன் என்று கையை பிடிக்கும் கட்டிங் மாஸ்டர்கள், பதவி உயர்வு கேட்கும்போது படுக்கை அறைக்கு அழைக்கும் முதலாளிகளின் தொல்லையால் தினம் தினம் செத்துப் பிழைக்கின்றனர். பகலிலேயே, இத்துணை கொடுமைகளை அனுபவிக்கும் பெண்கள் இரவில் வேலை செய்ய நிர்பந்திக்கப்பட்டால், இப்பெண்களின் கதி என்ன? இத்தீர்ப்பின் மூலம் தொழிலாளப் பெண்களின் வாழ்வு சூறையாடப்படுவதை நினைக்கையில் நெஞ்சு குமுறுகிறது!



படிப்பகம்

www.padippakam.com



## 2001 பெண்களை அதிகாரத்தில் அமர்த்தும் ஆண்டாம் ?

இந்திய அரசு 2001–ஐ 'பெண்களை அதிகாரத்தில் அமர்த்தும் ஆண்டாக' அறிவித்துள்ளது. வாஜ்பாய் அரசு இப்படி அறிவித்த சில நாட்களிலேயே, சமீபத்தில் நடந்த பாராளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் பாராளுமன்றத்தில் பெண்களுக்கான 33% இடஒதுக்கீடு பற்றிய மசோதா தோல்வியடைந்துள்ளது. மற்றொரு புறம் பெண்களுக்கு பாராளுமன்றத்தில் 10% இடஒதுக்கீடு போதுமானது என்று அமைச்சர் ஒருவர் தன்னுடைய ஆணாதிக்க வெறியை வெளிப்படுத்தியுள்ளார். "33% இடஒதுக்கீடு நிறைவேறினாலும், நிறைவேறவில்லையெனினும் எனக்கு பிரச்சனை இல்லை" என்று வாஜ்பாய் தனது அராஜகத் தன்மையை வெளிப்படுத்தி உள்ளார்.

நண்பர்களே! நினைவுள்ளதா? பெண்களின் முன்னேற்றத்தை குறிக்கும் வகையில் நடந்த பீஜிங்+5 மாநாட்டில், முடிவு எடுப்பதில் பெண்களுக்கான பங்கை அதிகப்படுத்துவது என்ற தீர்மானத்தை அனைத்து நாடுகளும் செயல்படுத்த வேண்டும் என்று அமெரிக்காவின் கட்டளையை ஏற்றுக் கொண்டதன் வெளிப்பாடுதான், இந்தியாவில் 2001–ஐ "பெண்களை அதிகாரத்தில் அமர்த்தும் ஆண்டு" என்ற அறிவிப்பு! ஜெயலலிதா போன்ற செல்வ சீமாட்டிகள் ஆட்சிப் பீடத்தைப் பிடித்து ஏழைப் பெண்களை சுரண்டிக் கொழுக்கத் தான் இந்த அறிவிப்பு!

2001–ல் பெண்களுக்கான சட்டம் உடல்நிலை, கல்வி, சுகாதாரம் என்று ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விசயத்திற்கு இந்திய அரசு முக்கியத்துவம் கொடுக்கப் போகின்றதாக முரளி மனோகர் ஜோசி அறிவித்துள்ளார். இப்படிப்பட்ட திட்டங்களை அறிவித்துவிட்டு அதற்கான கூட்டங்களை ஏற்பாடு செய்து வாய்சவடால் அடிப்பதாலும், சீர்திருத்தத்திற்கான சட்டங்களை நிறைவேற்றுவதாலும் மட்டுமே பெண்களின் பிரச்சனைகள் தீர்ந்துவிடுமா? ஒவ்வொரு 54 நிமிடத்திற்கு ஒருமுறை நடக்கும் பாலியல் வன்முறை குறைந்துவிடுமா? இல்லை! மாறாக, ஒவ்வொரு ஓட்டுக் கட்சியும் இத்திட்டங்களை வைத்து வரப்போகும் தேர்தலில் வாக்குறுதிகளை அள்ளி வீசி பெண்களின் ஓட்டுக்களை பொறுக்கத்தான் இந்த அறிவிப்புகள் பயன்படப் போகின்றன.

அதே சமயம், பெண்களுக்கு எதிராக வளர்ந்துவரும் வன்முறைகளை எதிர்த்து கொழுந்துவிட்டு எரியும் பெண்களின் போராட்டங்களை திட்டமிட்டு மழுங்கடிப்பதை நோக்கமாகக் கொண்டது தான் – 2001 – பெண்களை அதிகாரத்தில் அமர்த்தும் ஆண்டாக அறிவிக்கப்பட்ட பின்னணி!

### ஜூலியின் அகோரம்



புற்றீசல் போல் வளர்ந்துவரும் ஏகாதிபத்திய பண்பாட்டு தாக்கத்தினால், இந்தியாவில் பாலியல் தொழில் வளர்ந்து வருவது, நாமனைவரும் அறிந்ததே! வெளிநாட்டவரின் காம இச்சையைப் பூர்த்தி செய்ய கேரளத்திலிருந்து 4 வயது சிறுமி கோவளத்திற்கு கடத்தப்பட்டதும் நமக்குத் தெரியும். இதோ! பம்பாயில் பாலியல் தொழிலுக்கு இரையான மற்றொரு ஒன்பது வயது ஜூலி!



படிப்பகம்

www.padippakam.com

... செய்தித் துளிகள்... ... செய்தித் துளிகள்... ... செய்தித் துளிகள்...

# இந்திய பெண்களே உலக அழகிகளாக தேர்ந்தெடுக்கப்படுவதன் பின்னணி

*1951* களில் இங்கிலாந்திலும், பிறகு அமெரிக்காவிலும் நடத்தப்பட்ட அழகிப் போட்டிகள், 70 களிலிருந்து ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளுக்கு மாற்றப்பட்டன. எந்தெந்த நாடுகளில் ஏகாதிபத்தியங்கள் தனது சந்தையை விரிவாக்க விரும்புகின்றனவோ, அந்நாட்டிலிருந்து தான் அழகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

1970–ல் வெனிசுலா தனது நாட்டிற்குள் பன்னாட்டு நிறுவனங்களை வரவேற்றவுடன், அந்த ஆண்டின் உலக அழகி பரிசு வெனிசுலா நாட்டுப் பெண்ணுக்கு வழங்கப்பட்டது. அதேப் போல, ஜமாய்க்கா தனது பொருளியலை அந்நிய ஆக்கிரமிப்புக்குத் திறந்துவிட்டவுடன் ஜமாய்க்கா நாட்டுப் பெண்ணுக்கு உலக அழகி பரிசு வழங்கப்பட்டது. தென் ஆப்பிரிக்காவின் மண்டேலா மேற்கத்திய நாடுகளிடம் கையேந்திய பிறகு, தென் ஆப்பிரிக்கப் பெண்ணுக்கு உலக அழகிப் பரிசு கிடைத்தது.

1966களிலிருந்து 1990 வரை இந்தியாவில் உலக அழகிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. 1990 முதல் நமது நாட்டில் தாராளமயமாதல் என்ற பெயரில் ஏகாதிபத்தியங்களின் சூறையாடல் தீவிரமடைந்து வருகின்றது.

இந்தியாவை ராவ்களும், கவுடாக்களும் புதிய பொருளியல் கொள்கை என்ற பெயரில் அந்நியர்களுக்கு நாட்டையே விற்று வருகின்றனர். இத்தகைய சூழலில்தான் இந்திய பெண்கள் திடீரென உலக அழகிகளாக முளைத்து உள்ளனர்.

1992 – மது காப்ரே – உலக அழகிப்போட்டியில் 2வது இடம்

1993 – நம்ரதா சரோத்கர் – மிஸ் யுனிவர்ஸ்

1994 – ஐஸ்வர்யா ராய் – மிஸ் வேல்டு
சுஸ்மிதா சென் – மிஸ் யுனிவர்ஸ்

1996 – உலக அழகிப் போட்டியே பெங்களூரில் இராணுவத்தின் துணையுடன் ஜோராக கொண்டாடப்பட்டது.

2000 – பிரியங்கா சோப்ரா – மிஸ் வேல்டு
யுக்தா முக் – மிஸ் யுனிவர்ஸ்.

இது ஏதோ எதார்த்தமாக நடத்தப்படும் அழகிப் போட்டி அல்ல. மாறாக, பொருட்களை விற்பதற்கான சந்தை சதிதான்! இந்தியா போன்ற மூன்றாம் நாடுகளின் மீது அழகிகளின் மூலம் ஆட்சி அதிகாரத்தை நிறுவதற்கான திட்டமிட்ட சதிதான்!



படிப்பகம்

www.padippakam.com

**... செய்தித் துளிகள்... ... செய்தித் துளிகள்... ... செய்தித் துளிகள்...**

## 2000 –ல் இந்தியாவில் பெண்களுக்கெதிரானக் குற்றங்கள் :

அல்லியனியத்தை நோக்கி இந்தியா 'வீறு நடை' போட்டுக் கொண்டிருக்கும் இத்தருவாயில் இந்தியப் பெண்கள் மற்றும் குழந்தை வளர்ச்சி அமைச்சகத்தின் புள்ளிவிவரப்படி, இந்தியாவில்

***ஒவ்வொரு 54 நிமிடத்திற்கும் ஒரு வன்புணர்ச்சி***
***ஒவ்வொரு 26 நிமிடத்திற்கும் ஒரு பாலியல் வன்முறை***
***ஒவ்வொரு 4 நிமிடத்திற்கும் ஒரு பெண் கடத்தப்படுவது.***
***ஒவ்வொரு 16 நிமிடத்திற்கும் ஒரு வரதட்சணைக் கொலை***
***ஒவ்வொரு 33 நிமிடத்திற்கும் ஒரு வன்முறை***
***ஒவ்வொரு 7 நிமிடத்திற்கும் ஒரு பெண்களுக்கெதிரான குற்றம்.***

நடக்கின்றது இப்படி, பெண்களுக்கெதிரான கொடுமைகள் நாளும் வேகமாக வளர்ந்து வருகின்றது. இக்கொடுமைகளை தடுக்கின்றோம் என்று, பெயரளவில் சட்டங்களும், மகளிர் காவல் நிலையங்களும் அமைக்கப்பட்டிருப்பது நாமனைவரும் அறிந்ததே!

இந்த மகளிர் காவல் நிலையத்திலும், ஏனைய காவல் நிலையங்களிலும் காவல் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தால் தான் வழக்கு பதிவு செய்ய முடியும் போக்கு தமிழகத்தில் தீவிரமாக உள்ளது.

மேலும், ஆட்சி அரியணையில் உள்ள ஆட்சியாளர்களை பாதுகாப்பதும், அவர்கள் கூட்டங்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதும், அதிகாரிகளை மகிழ்விக்க காவல் ஜீப்களின் அணிவகுப்பை செய்யவுமே நேரம் சரியாக இருக்கையில், பெண்கள் மீதான வன்முறைகளுக்கு குறைக்க நேரமேது?

'சுதந்திரம்' என்று கூப்பாடு போடும் இந்தியாவில், பெண்களின் உண்மை நிலையை இந்திய அரசின் இந்த புள்ளிவிவரமும் விவரிக்கின்றது. அதிகரித்துவரும் பெண்களின் மீதான வன்முறைகளுக்கு முற்றுபுள்ளி வைக்க வேண்டுமெனில் அரசின் போலி சுதந்திர முகமூடியை கிழித்தெறிந்து ஓரணியில் திரள்வோம்!



படிப்பகம்

www.padippakam.com

# போராடும் பெண்கள் மீதான வன்முறைகள்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவை விட்டு சென்ற பின், அதாவது 1947–க்கு பின் இந்தியா, அனைத்து ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையின் கீழ் இந்தியா சிக்கி தவிக்கின்றது. உலகில் அனைத்து ஏகாதிபத்திய நாடுகளும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளன. இந்த பொருளாதார நெருக்கடியை மூன்றாம் உலக நாடுகளின் மீது சுமத்துகின்றன. கடன் வலையில் சிக்கி தவிக்கும் மூன்றாம் உலக நாடுகளின் மீது நிபந்தனைகளுடன் கடன் கொடுத்து தங்களுக்கு சாதகமான அரசியல் பொருளாதார திட்டங்களை திணிக்கின்றன. ரூபாய் மதிப்பு குறைப்பு, தாராளமயம், பொதுத்துறை தனியார் மயம், உலக வங்கி பட்ஜெட் தயாரிப்பது போன்ற நிபந்தனைகளை ஏற்று இந்திய அரசு இந்தியாவில் பல மக்கள் விரோத திட்டங்களை அறிவிக்கின்றது. இதனால், மக்கள் விரோத திட்டங்களை எதிர்த்து போராட்டங்கள், ஜனநாயக உரிமைக்கான போராட்டங்கள் இந்தியாவில் கொழுந்து விட்டு எரிகின்றன. அதே சமயம், இந்த சீர்கெட்ட சமூக அமைப்பை மாற்றியமைக்க புரட்சிகர இயக்கங்கள் போராடி வருகின்றன.

இப்போராட்டங்களால் ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டல் கேள்விக்குள்ளாக்கப் படுவதால் இரும்புக் கரங்களை கொண்டு போராட்டங்களும், போராளிகளும் ஒடுக்கப்படுகின்றனர். இந்தியாவில் ஜனநாயகம் என்ற பெயரில் பாசிச ஆட்சியே நிலைநிறுத்தப்படுகின்றது. ஆதிக்க சக்திகள், தனியார் இராணுவ படைகள் மூலமும் அடக்குமுறைகள் ஏவப்படுகின்றன. அடக்குமுறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்தியா முழுக்க போராடும் பெண்களின் மீது ஒடுக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. இதற்கு பல உதாரணங்களை கூறலாம்.

தமிழகத்தில் நெல்லை மாவட்ட மாஞ்சோலையில் தோட்டத்தொழிலாளர்கள் கூலி உயர்வுக்காக போராடி கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி நடந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்களின் மீது காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை தமிழக அரசு தொடுத்தது. பெண்களை நிர்வாணமாக்கி, தடியடி செய்து, துப்பாக்கியால் பின்புற பெயனெட்டால் தாக்கி கொன்றது. ஊர்வலத்தின் முதலில் பேனர் பிடித்து வந்த சீதாலட்சுமியை பூட்ஸ் கால்களால் வயிற்றில் கடுமையாக தாக்கியதுடன், நீரோடு இரத்தம் போய்க்கொண்டிருந்த சீதாலட்சுமியை தாமிரபரணி ஆற்றில் தூக்கிப்போட்டது. ஜோஸ்பின் என்பவரை நிர்வாணமாக்கி தலையில் அடித்து ஆற்றில் தள்ளி தன்னுடைய கொலை வெறியை தீர்த்துக்கொண்டது தமிழக அரசு!

திருவள்ளுவர் டவுன் அருகே பீமன் தோப்பு பகுதியில் கிராம பெண்கள் முன்னணி தலைவர் யசோதா மூன்று நாட்களாக கள்ளச்சாராயம் காய்ச்சி விற்று வந்த கும்பலை காய்ச்சப்படும் இடமான ஆற்றங்கரைக்கே போய் தட்டிக் கேட்டிருக்கின்றார். 6–12–2000 அன்று, சாராயத்தை விற்றே



படிப்பகம்

www.padippakam.com

பிழைப்பு நடத்தி வந்த ஆதிக்க கும்பல், அவன
உருட்டுக் கட்டையால் அடித்ததோடு அல்லாம
அவர் மயங்கி விழுந்த பின் அவரைத் தே
வந்த மகள் இராணியை வெட்டியும் சகோத
ரத்தினம்மாளை கல்லை தூக்கியெறிந்து
கொலை செய்துள்ளனர்.



சாராயத்தை எதிர்த்து போராடும் பெண்கள்

சமீபத்தில் நவம்பர் மாத இறுதியி
ஆந்திர கரீம் நகரில் பெண் விடுதலைக்கா
சமூக மாற்றத்திற்காக போராடும் 'விப்ளவ மஹிளா சங்கத்தில்' (புரட்சிகர பெண்கள் சங்கத்தின்) செயல்பட்டு வரும் ஏழு பெண்கள் ஆந்திர போலீசால் கைது செய்யப்பட்டு கடுமையான சித்ரவதைக்குப் பின் கொல்லப்பட்டுள்ளனர். 14–20 வயதுடைய இப்பெண்களின் மார்பகங்கள் வெட்டப்பட்டு, பற்கள் வேரோடு பிடுங்கப்பட்டு, எலும்புகள் முறிக்கப்பட்டு பல கொடுமையான சித்ரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டு குற்றுயிரும் கொலையுயிருமாய் ஆந்திர அரசு கொன்று குவித்துள்ளது.

தெலுங்கானா ஜன சாபாவின் ஒருங்கிணைப்பாளராக தனி தெலுங்கானா கோரிக்கையை முன் வைத்து கலை நிகழ்ச்சிகள் மூலம் மக்களை அணிதிரட்டிய பெல்லி லலிதாவை 17 பாகமாக வெட்டி மூன்று பகுதிகளாக தூக்கியெறிந்தது ஆந்திர அரசு!

காஷ்மீரில் சுயநிர்ணய உரிமைக்காக போராடிவரும் பெண்களை சட்டம் ஒழுங்கு என்ற பெயரால் பாலியல் கொடூரத்திற்கும் வன்புணர்ச்சிக்கும் (கற்பழிப்பு) இரையாக்குவது என்பது தினசரி நிகழ்ச்சியாகிவிட்டது. எட்டு ஜவான்களினால் கூட்டு வன்புணர்ச்சிக்கு எட்டு மாத கர்ப்பிணிப் பெண் இரையாக்கப்பட்டார். இதுபோன்ற நிகழ்ச்சிகள் அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டதனால், காக்கி உடையை பார்த்தாலே பெண்கள் அலறும் நிலையில் உள்ளனர்.

பீகாரில் நிலப்பிரபுக்களால் உருவாக்கப்பட்ட தனியார் இராணுவ படையான ரன்வீர் சேனா, சவானி விடுதலை இயக்கம் போன்றவற்றின் அராஜகங்களை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. சவானி விடுதலை இராணுவத்தின் கூட்டு வன்புணர்ச்சி இயக்கத்தால் 200 பெண்கள் வன்புணர்ச்சிக்கு இரையாக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு கூட 20 பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அஸ்ஸாமில் தேசிய இன பிரச்சினையை முன்வைத்து போராடும் பெண்கள் மீது இந்திய அரசு கடுமையான அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்டுள்ளது. சிண்டாய் வஸ்காம் என்ற நான்கு மாத கர்ப்பிணி இந்திய இராணுவத்தால் வன்புணர்ச்சிக்கு இரையாக்கப்பட்டுள்ளார். அக்டோபர் 26, 1996 அன்று கெபிலாபாரா மாவட்டத்தில் ஒன்பது வயதான பெண் வன்புணர்ச்சிக்கு இரையாக்கப்பட்டுள்ளார்.

இதுபோன்ற கொடூரமான அடக்குமுறைகளால், இந்திய அரசும் ஆதிக்க சக்திகளும் கொழுந்துவிட்டு எரியும் பெண்களின் போராட்டங்களை ஒடுக்க முயற்சிக்கின்றது. ஆனால், ஒடுக்குமுறைகளால் புண்பட்ட பெண்கள் வீறுகொண்டு எழுவதை எந்த சக்தியாலும் ஒடுக்க முடியாது என்பதை புரிந்து கொள்ள இவர்கள் மறுக்கின்றனர்.

*– தேன்மொழி*



படிப்பகம்

www.padippakam.com

36ம் பக்கத்தின் தொடர்ச்சி

மேலும் தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து, செப்டம்பர் – 30 வரையிலான தமிழக அரசின் புள்ளவிவரப்படி, ஒவ்வொரு 15 மணி நேரத்திற்கும் ஒரு பெண் வன்புணர்ச்சி செய்யப்படுகின்றாள். ஒவ்வொரு 24 மணி நேரத்திற்கும் ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு இரையாகின்றாள். இரண்டு பெண்கள் கடத்தப்படுகின்றனர். ஒரு பெண் கொலை செய்யப்படுகின்றாள்.

இந்தப் புள்ளி விவரத்தில் இடம்பெறாத கொடுமைகள் எத்தனையோ? போலீஸ் பயிற்சி கல்லூரியின் பேராசிரியர் உஷாராணியின் கூற்றுப்படி பார்த்தாலும், பெண்களுக்கு எதிரான குற்றங்களில் 10– ல் ஒரு பங்கு தான் பதிவு செய்யப்படுகின்றது. எஞ்சிய 9 சதவீதம் பதிவு செய்யப்படுவதே இல்லை என்பது தெரிகின்றது.

இன்றைய வளர்ந்துவரும் சமூக – பொருளாதார – அரசியல் முரண்பாடுகளினால் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இன்னமும் அதிகரிக்கப் போவது திண்ணம். இந்தக் கொடுமைகளை சகித்துக் கொள்ளாமல் இதை எதிர்த்து 'போராட்டமே வாழ்வின் விதி' என்று போராட்டப் பாதையில் அணிதிரள வேண்டிய அவசிய தேவை நம்முன் உள்ளது.

*தேன்மொழி*

---

**அன்பார்ந்த நண்பர்களே!**

**'பெண் உரிமை'யைப் படியுங்கள்**
**உங்கள் நண்பர்களுக்கு**
**அறிமுகப்படுத்துங்கள்;**
**விமர்சனங்களையும்,**
**படைப்புகளையும்**
**தவறாமல் அனுப்புங்கள்.**

– *ஆசிரியர்*



படிப்பகம்

www.padippakam.com

# தமிழகத்தில் பெண்களுக்கெதிரான கொடுமைகள்

## அதிர்ச்சியூட்டும் தகவல்கள்

*1996* முதல் செப்டம்பர் 30, 2000 வரையிலான காலக்கட்டத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 50% அதிகரித்துள்ளதாக தமிழக அரசின் புள்ளிவிவரம் விவரிக்கின்றது.

### 4 ஆண்டில் தமிழகப் பெண்களின் அவல நிலை

| | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 (செப்.வரை) |
|---|---|---|---|---|---|
| கற்பழிப்பு | 279 | 307 | 352 | 400 | 445 |
| கற்பழிப்பு முயற்சி | 8 | 6 | 4 | 35 | 20 |
| பாலியல் பலாத்காரம் | 1052 | 1236 | 1604 | 1880 | 1614 |
| கடத்தல் / ஒளித்தல் | 530 | 651 | 814 | 813 | 724 |
| ஈவ்டீசிங் | 1617 | 1453 | 4733 | 2034 | 2422 |
| வரதட்சணை மரணம் | 132 | 139 | 196 | 199 | 146 |
| வரதட்சணை கொடுமை | 404 | 467 | 453 | 661 | 758 |
| சிசுக் கொலை | 0 | 0 | 0 | 2 | 10 |

மொத்தம்


1996

1997

1998

1999

2000 (செப்.வரை)




*தகவல் : நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், 27.11.2000*

*தொடர்ச்சி 35ம் பக்கம்*



படிப்பகம்